இதழ் 203

# மண்

ஜேர்மனி / 2020

புரட்டாதி - ஐப்பசி / Sep - Oct



## Srilanka / General Election - 05.08.2020

2020 பொதுத்தேர்தல் பாராளுமன்றம் சென்ற தமிழர்கள் சிலர்...
(விபரம் உள்ளே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









**யேர்மனி "மண்" சஞ்சிகையின் வாசகர்கள் நிதி உதவியனால் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் "ஒளிரும் வாழ்வு அமைப்பு" மேற்கொண்டுவரும் சமூகமுன்னேற்றப் பணிகளில் தென்னைவளர்ப்பு, ஆடுவளர்ப்பு போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்படும் சில பதிவுகள்.**

**Olirumvaalvu Thunukkai**
3 mins ·

எமது அமைப்புக்கு உதவும் குடும்பத்தின் வேண்டுகோளிற்கமைவாக அவர்கள் அம்மா எலிசபெத் அன்ரனி சைமன் அவர்களின் நினைவு நாளான இன்று பிள்ளைகளால் வழங்கப்பட்ட உலருணவுப்பொருட்களை அவர்கள் இடம்பெயர்ந்து வசித்த மாங்குளம் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு வழங்கினோம். உதவிய சகோதரர்களுக்கு எமது நன்றிகள்.





**Olirumvaalvu Thunukkai**
7 min ·

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினரால் எமது வேண்டுகோளிற்கமைவாக மாற்றுத்திறனாளிகள் இருவருக்கு கோழி வளர்ப்பிற்கான வாழ்வாதார உதவி வழங்கப்பட்டது. உதவிய நல்லுள்ளங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி


MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany


முகவரி: V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

தொலைபேசி: 0203/8073898

தொலைநகல்: 0203/8073898

மின்னஞ்சல்: v.sivarajah@arcor.de



வங்கிவிபரம்: Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

தமிழ் தொன்மையான மொழிகளிலொன்று என்பதும் தமிழர் வரலாற்றுச் சிறப்புமிக்க இனம் என்பதும் உலகில் ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மைதான். அதனால் எமக்குப் பெருமையென்பதில் எந்தவித மறுப்புமிருக்கமுடியாது. இலங்கையில் வாழ்ந்த ஆதிக்குடிகள் தமிழைப் பேசியிருப்பார்களென்பதும் தர்க்கரீதியாகப் புரிந்துகொள்ளக்கூடியதுதான். அதை இந்த இரண்டாயிரத்து இருபதாமாண்டில் இனத்துவேஷத்தை வெளிப்படையாகப் பேசுபவர்கள் மிகுந்த அளவில் நிரம்பியிருக்கும் சபையில் பேசுவதில் ஏற்படப்போகும் பயனென்ன?

இலங்கையில் எழுபத்தியொராண்டு காலமாக சாத்வீகமான அரசியல்ப்போராட்டம், உக்கிரமான ஆயுதப்போராட்டம் முதலியவற்றை மேற்கொண்டும் அடையமுடியாத தமிழர் உரிமையை எமது பழம்பெருமையைப் பாராளுமன்றத்தில் பேசுவதனால் பெற்றுவிடமுடியுமா? அவ்வளவு சுலபமானதென்றால் இத்தனை வருடபோராட்டமும் இத்தனை உயிர்த் தியாகங்களும் அழிவுகளும் தேவையற்றவையா? என்றெல்லாம் எண்ணவைத்தது. சபாநாயகரைப் பாராட்ட எழுந்து பேசிய புதிய பாராளுமன்ற உறுப்பினர் சி. வி. விக்னேஸ்வரன் அவர்களது பேச்சு. பாராட்டுவதற்காக எழுந்தவர், எந்த மொழியிலாவது பாராட்டிவிட்டு அமர்ந்திருக்கலாம். அதிலே தமிழின் பெருமையையும் ஆதிக்குடிகள் பேசிய மொழிபற்றியும் பேசுவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டதென்பதுபற்றித் தர்க்கரீதியாக புரிந்துகொள்ளமுடியவில்லை.

ஏனோ தெரியவில்லை, எந்த இனத்தவர்களைக் காட்டிலும் தமிழினத்தவர் பழம்பெருமை பேசுவதில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். அது அவர்களை எளிதில் உணர்ச்சிவசப்பட வைத்துவிடுகிறது. நாம் தமிழ்த்தாயைப் போற்றுவதுபோல் ஆங்கிலேயர்கள் ஆங்கிலத்தாயையும் சீனர்கள் சீனத்தாயைப் பொதுமேடைகளில் போற்றுவதில்லை. தற்பெருமை பேசுவது நாகரீகமற்ற செயலென்று கருதப்படும் இக்காலத்தில் நாம் அதைத்தான் பேசுகிறோம்.

எமது பெருமையை அதற்குரிய அறிஞர்கள் கூடும் அரங்குகளிலும் மொழியாராச்சி மகாநாடுகளில் உலகப்பல்கலைக்கழகங்களில்பேசலாம். தமிழரின் பாரம்பரிய பெருமைகளை எமது வருங்காலச் சந்ததியினருக்குச் சொல்லிக்கொடுக்கலாம். அதைவிடுத்துத் தமிழர்பெருமை பேசுவதில் எந்தவித பயனும் ஏற்படப்போவதில்லை. மேலும் இனக்குரோதத்தை வளர்த்து, கொந்தளிப்பு நிலையை ஏற்படுத்தி, அதிலே குளிர்காயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தர்ப்பத்தைத்தான் அனைவருக்கும் உண்டாக்கும். ஒருவேளை இப்படியானதொரு நிலையை உண்டாக்கித் தனது ஆதரவாளர்கள் மத்தியில் தானொரு தமிழ் மறவனென்ற கதாநாயக அந்தஸ்த்தைப் பெற்றால். தனது காலத்தை இப்படியே ஓட்டிவிடலாமென்று நினைத்து இத்தகைய உரைகளை சி. வி. விக்னேஸ்வரன் ஆற்றுகிறாரென்றால் இது எல்லோருக்கும் புரிந்த அரசியல் உத்தியென்பதை அவர் தெரிந்துகொள்ளவேண்டும்.

இதை ஏதோ புதுக்கருத்தைக் கூறுவதுபோல் சி. வி. விக்னேஸ்வரன் அவர்கள் கூறுவது ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. சிங்களஇனம் ஒன்றுபட்டு மிகப்பலம்பொருந்திய பாராளுமன்றத்தை அமைத்துள்ள இந்நிலையில் தமிழர்களின் உரிமைகளை அந்தப் பாராளுமன்றத்தில்ச்சென்று வாதாடிப் பெறவேண்டியிருக்கும் நம் அரசியல்வாதிகளின் ஒவ்வொரு சொல்லும் செயலும் விவேகம் நிறைந்ததாக இருக்கவேண்டும். வாய்வீரம் யாரும் பேசலாம், பாதிக்கப்படப்போவது தமிழினம்தான். பாராளுமன்றத்தில் பேசுவதற்கு முழுஉரிமையும் இருக்கிறது, யாரும் தடுக்க முடியாதென்றெல்லாம் சப்பைக்கட்டுக்கட்டி வாயில் வந்தவற்றைப் பேசுவது விவேகமான செயலல்ல. சிங்களப் பெரும்பான்மையரசு தமிழர்களை எவ்வாறு நியாயமற்ற முறையில் புறக்கணிக்கிறதென்று ஆதாரத்துடன் நிரூபிப்பது, தற்போதைய அரசு மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையையும் உன்னிப்பாகக் கவனித்து அவற்றில் மறைமுகமாக இருக்கும் இனவிரோத நோக்கங்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவருவது, கேள்வியெழுப்புவது, உலகில் சிறுபான்மையினரின் உரிமையைப் பேணும் அரசியலமைப்புகள்பற்றி எடுத்துக் கூறுவது, அரசியலமைப்புச் சட்டங்களை விளக்குவது, மனிதஉரிமைபற்றிப் பேசுவது, விவாதிப்பது போன்ற அறிவார்ந்த அரசியல்பேசித் தமிழர்கள் உரிமை மறுக்கப்படுகிறதென்று சகல தேசத்தவர்க்கும் நிரூபிக்கும் வகையிலான அரசியல்ப் போராட்டக்களமாகப் பாராளுமன்றத்தை உபயோகப்படுத்தவேண்டிய பெரும் பொறுப்பு தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளுக்கிருக்கிறது.

இது எழுபத்தியொரு ஆண்டுகால போராட்டத்தின் தொடர்ச்சியேயன்றிப் புதிதன்று. ஆனால் மிகத் தீவிரமாகச் செய்யவேண்டியபணி. மேற்கூறியவற்றை விடுத்து மலினமான தந்திரங்கள் மூலம் பாராளுமன்றப் பதவிகளைத் தக்கவைத்துக்கொள்ள எடுக்கும் முயற்சி, அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துத் தமிழர்களுக்குமே அவமானத்தைத்தேடும் செயலாக அமைவதோடு, இலங்கைத் தமிழர் பிரச்சினை இன்னும் பல நூற்றாண்டுகள் சென்றாலும் தீர்க்கப்படாத ஒன்றாக இருப்பதற்கே வழிவகுக்கும்....

-ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## வாது முன் கூறேல்...

வளரும் பயிரான சிறுவர் சிறுமியர்களாகிய உங்களுக்குத் தெரிந்தவை குறைவு. அறிந்து கொள்ள வேண்டியதோ ஏராளம். குழந்தைகளாகிய நீங்கள அறிவிலும் அனுபவத்திலும் குறைந்தவர்கள். எது நல்லது எது கெட்டது என்பதை அறிந்து செயற்படும் திறமையும் உங்களுக்குக் குறைவு. இந்த நிலையில் அறிவிற் சிறந்த பெரியோர்கள் ஏதோ ஒரு விஷயம்பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள். பெரியவர்களில் சிலர் "சரி" என்கிறார்கள். வேறு சிலர் "அது தவறு இதுதான் சரி" என்கிறார்கள். இப்படி அறிவில் சிறந்த அனுபவம் கொண்ட பெரியோர்கள் விவாதிக்கும்போது சிறியவர்களான நீங்கள் குறுக்கே புகுந்து உங்களுடைய யோசனையைக் கூறலாமா?.. வாதிட்டுப் பேசலாமா?.. கூடாது. பெரியவர்கள் விவாதிக்கும்போது சிறுவர்களான நீங்கள் குறுக்கே பேசக்கூடாது.

## வித்தை விரும்பு...

நம் இன்ப வாழ்வுக்கு இன்றியமையாதது எது?..ஆனால் செல்வமோ "செல்வோம்" என்று மறையக்கூடியது. அழியக்கூடியது. இன்று லட்சாதிபதியாக இருப்பவன் நாளை பிட்சாதிபதியாவான். பாடுபட்டுத் தேடினாலும் பாதுகாத்தாலும்கூட அழியக்கூடியது செல்வம். உன்னிடமுள்ள அப்பொருட் செல்வத்தை பிறர் அபகரிக்க ஆசைப்படுவார்கள். பிறரால் அபகரிக்க முடியாத, திருட்டுப்போகாத, குறைவுபடாமல் வளரக்கூடிய, நிரந்தரமாக என்றும் நிலைத்திருக்கக்கூடிய செல்வத்தையே நாம் தேடி நாட வேண்டும். அழியாப் பொருளான அச் செல்வம் எது?..கல்விச் செல்வம்தான். மற்றச் செல்வங்கள் எல்லாமே அழியக்கூடியவையே. ஆகவே கல்விச் செல்வத்தை விரும்பித் தேடிக்கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குண்டாம்..... (மூதுரை) (தொடர்ச்சி)

நஞ்சுஉடைமை தான்அறிந்து நாகம் கரைந்தறையும்
அஞ்சாப் புறம்கிடக்கும் நீர்ப்பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

தண்ணீர்ப்பாப்பு இருக்கிறதே. அதற்கு நஞ்சு கிடையாது. எனவே அது எங்கும் திரியும். வெளியில் இனங்காட்டும். ஆனால் நல்ல பாம்போ அப்படி அன்று. அது விஷமுடையது. நல்ல பாம்பை யாராவது கண்டால் உடனே கொன்றுவிடுவார்கள். எனவே அந்த நாகம் பயந்து, ஒளித்து வாழும். அதுபோல வஞ்சமுள்ள நெஞ்சுடையவர்கள் பூசி மெழுகித் தம் உள்ளத்தை மறைத்துப் பேசுவர். வஞ்சமில்லா செஞ்சத்தினரோ அவ்விதம் செய்ய மாட்டார். வஞ்சனையற்ற உள்ளமுடையார் எதையும் வெளிப்படையாகப் பேசுவர். வஞ்சகரோ மறைத்து மழுப்புவர்.

மன்னனும் மாசுஅறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்புஇல்லை கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு.

ஓர் அறிஞன் சிறந்தவனா?..அரசன் சிறந்தவனா?..அறிஞனே சிறந்தவன்.அரசன் அல்லன் ஏன்?..அரசனுக்கு எங்கே சிறப்பு?.. அவன் தேசத்தில்தான். அங்கேதான் அவனை எல்லோரும் வணங்குவார்கள். ஆனால் அறிஞனுக்கோ எங்கும் சிறப்பு. சென்ற இடம் எங்கும் சிறப்பு. எல்லோரும் அவனைப் போற்றுவர். வணங்குவர். புகழ்வர். மன்னனுக்குத் தன் தேசத்தில் பெருமை. கற்றோர்க்குச் சென்ற இடம் எங்கும் பெருமை. எனவே அரசனைவிடக் கல்விமானே பெரியவன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கிராமம்.... "வயலூர்" (களுதாவளை)

இயற்கை எழில் நிறைந்து விளங்கும் வயலூர் எனது கிராமம். இது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் ஒன்று. வயல்கள் நிறைந்த கிராமமாவதால் வயலூர் எனப் பெயர் பெற்றது என்பர். வயலூர் வளங்கள் பல நிறைந்த கிராமமாகும்.

இக்கிராமத்தில் சுமார் அறுநூறு குடும்பங்கள் வாழ்கின்றனர். தென்னந்தோப்புகளும் வயல் நிலங்களும் இக்கிராமத்தின் அழகிற்கு அழகு சேர்க்கின்றன. இக்கிராமத்தில் பச்சைப்பசேலென காட்சிதரும் வயல் வெளிகளை அடுத்து, வீடுகள் காணப்படுகின்றன. மாடிவீடுகள் முதல் மண் குடிசைகள்வரை எனது கிராமத்தில் உண்டு. எனது கிராமத்தில் வசிப்போரில் பெரும்பாலானோர் விவசாயிகள். இவர்கள் நெற்செய்கை, தோட்டச்செய்கை போன்றவற்றில் ஈடுபடுகின்றனர். இதனால் இவர்களிடம் பணப்புழக்கம் தற்போது அதிகரித்துள்ளது.

எனது கிராமத்தில் சிலர் ஆசிரியர்களாகவும் அரச ஊழியர்களாகவும் உள்ளனர். எனது கிராமத்தில் இரு பாடசாலைகள் உள்ளன. இப்பாடசாலைகளில் பதினொராம் வகுப்புவரை மாணவர்கள் கல்வி பயில்கிறார்கள். உயர்தர வகுப்புக்களில் கல்வி பயில நகரத்திலுள்ள பாடசாலைகளுக்கே செல்லவேண்டியிருக்கின்றது.

எனது கிராமத்துக்கு இவ்வாண்டு முதல் மின்சார வசதிகிட்டியுள்ளது. பல வீடுகள் இதன்மூலம் ஒளிமயமாகியுள்ளன. நூலகம், தபாலகம், சந்தை, சனசமூகநிலையம், பிரதேசசபை அலுவலகம் யாவும் எனது கிராமத்தில் இருக்கின்றன. விரைவில் தேசிய சேமிப்பு வங்கியின்கிளை ஒன்று இங்கு திறந்து வைக்கப்பட இருக்கின்றது. இங்குள்ள வீடுகளில் தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி வசதிகளுக்கும் குறைவில்லை.

எனது கிராமத்தில் மூன்று சைவ ஆலயங்களும் ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் உள்ளன. இங்குள்ள மக்கள் அனைவரும் இன, மத பேதமின்றி ஒற்றுமையாக வாழ்கிறார்கள். எனது கிராமத்திலுள்ள நூலகத்திற்கு பல கொடையாளிகள் பெறுமதிமிக்க நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். இங்குள்ள ஆலயங்களின் புனருத்தாரண வேலைகளுக்குப் பெருமளவு பணத்தைக் கொடுத்து உதவியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கிராமத்தின் மத்தியில் புதிய சந்தைக் கட்டிடம் ஒன்று தற்போது கட்டப்பட்டு வருகின்றது. இங்குள்ள விவசாயிகளின் நன்மை கருதிப் பிரதேசசபை இதனை நிறுவி வருகின்றது. இங்குள்ள கிராமிய வைத்தியசாலையும் பல்வேறு வைத்திய வசதிகளைக் கொண்டதாக விஸ்தரிக்கப்பட இருப்பதாகவும் அறிகின்றேன்.

இவற்றை எல்லாம் நோக்கும்போது எனது கிராமத்தின் வளர்ச்சி பெருமை தருவதாகவே அமைகின்றது. படிப்படியாக முன்னேற்றம் கண்டுவரும். விரைவில் அழகு மிகு நகரமாக மாறிவிடும் என்று நம்புகிறேன்!..

செல்வன் யோகராசா அஜந்தன்
திருஞானசம்பந்தர் "குருகுலம்"
களுதாவளை

## தேசியக்கொடிகள்...

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு தேசியக்கொடி இருக்கும். அதே வேளை ஒரு நாட்டின் தேசியக்கொடி இன்னொரு நாட்டின் தேசியக்கொடிபோல இருக்காது. நிறங்கள், படங்கள், அளவுகளில் மாறுபட்டே இருக்கும். இங்கு சில நாடுகளின் கொடிகள் பற்றிப் பார்ப்போம்...

1. அயர்லாந்து நாட்டு தேசியக்கொடியில் இசைக்கருவி இருக்கும்.

2. சைபிரஸ் நாட்டு தேசியக்கொடியில் அந்தநாட்டின் வரைபடம் இருக்கும்.

3. டென்மார்க் நாட்டு தேசியக்கொடிதான் உலகிலே பெரிய கொடியாகும்.

4. ஆப்கானிஸ்தான் நாட்டுக்கு இரண்டு தேசியக்கொடிகள் உண்டு.

5. இந்தியாவினதும் ஹங்கேரி நாட்டினதும் தேசியக்கொடிகள் ஒரே மாதிரியாக இருந்தாலும் இந்திய தேசியக்கொடியின் நடுவில் அசோக சக்கரம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்நெறியில்....

## கல்வியே கண்!.....

(வீ.நந்தகுமார்)

அறிவைப்பெற அதிகமான நேரத்தைப் பயன் படுத்திக்கொள்.

ஆழமான அறிவு அழகான வாழ்க்கையை அமைக்கிறது.

இந்தப் பூமிப்பயணம் ஒருமுறை மட்டும் தான், இதற்குள் முடிந்தளவு நன்மை செய்.

ஈரமான நிலத்தில் செடி வளரும், இளகிய மனதில் இரக்கம் வளரும்

உன்னிடம் உள்ள நல்ல ஒழுக்கம்தான், உண்மையான இறைவழிபாடு.

ஊக்கமான உழைப்பு உன்னை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரும்.

எத்தனை புத்தகம் என்பதல்ல, எப்படிப்பட்ட புத்தகம் படித்தோம் என்பது முக்கியம்.

ஏமாறுபவர்கள் இருந்தால் ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

ஐந்தில் ஆரம்பிக்கும் கல்வி காலம் முழுவதும் காப்பாற்றும் கலங்கரை விளக்கு.

ஒரு நாட்டின் வளர்ச்சி அந்தநாட்டு மக்களின் நல்லொழுக்கத்தில் உள்ளது.

ஓடி ஆடி வேலை செய்தால் ஒளிமயமான எதிர் காலம் ஒவ்வொருவருக்கும் உண்டு.

தூய வார்த்தைகளைக் கேளுங்கள் உங்கள் உள்ளம் தூய்மை பெறும்.

படிக்கும்போது பல கஷ்டங்கள், படித்து முடித்த பின்பு பல பட்டம் பதவிகள்.

கஷ்டப்பட்டுப் படிப்பது பள்ளிப்படிப்பு, நஷ்டப்பட்டுப் படிப்பது நாளாந்த அறிவு.

படிப்பும்சரி, பாட்டும்சரி, பிரியம்தான் பெரும் பலனைக் கொடுக்கிறது.

பணத்தால் புத்தகம் வாங்க முடியும் ஆனால், உங்களை படிக்க வைக்க முடியாது.

புத்தகம் இல்லாத வீடு யன்னல் இல்லாத இருட்டறை போன்றது.

படிப்பில் பட்டம் பெற்றாலும், வாழ்க்கையில் விடுதலை காணவேண்டும்.

படித்த படிப்புகளும், பட்டங்களும், கோபத்தால் இழக்கப்படுகிறது.

சினத்தை அடக்குவது நல்லது, அதைவிட சினம் வராமல் தடுப்பது மேலும் நல்லது.

வழமாக வாழக் கற்றுக்கொள், வாழ்கிறவனுக்குத்தான் வாழ்க்கை சொந்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெட்டத்தெளிவான தீர்மானங்கள் தொல்லை தொந்தரவுகளை தவிர்த்துச் செல்லும்.
குறிபார்த்துச் சுடுவதுபோல், சரிபார்த்து பேசுவது விரிவான ஒரு முறை.
பேச்சில் தீய சொற்கள் நுழையுமானால், புயல்வீசிய நகரம் போலாகும்.
வஞ்சனையான வாய்ச்சொற்கள், வாழ்க்கையை வலுவிழக்கச் செய்கிறது.
பணம் இழந்தால் பரவாயில்லை, ஆனால் பண்பு இழக்காமல் பார்த்துக்கொள்.
துன்பத்தை மறந்தாலும், அதுபுகட்டிய பாடத்தை மட்டும் மறக்காதே.
சண்டையும் சமாதானமும், உன் வார்த்தைகள் மூலம் உருவாகின்றன.
தகுந்த காலத்தில் தகுந்தவற்றைச் செய்தல் தலைமைக்குத் தகுதி .
இறைபக்தியுடன் புத்தியைப் பெற்றுக் கொள்பவன் பலவகை பாக்கியமும் பெறுகிறான்.
மன்னித்து வாழ்ந்தால் மானிட சமுதாயம் மகிழ்வடையும்.

---

## தகவல்கள்:-

(1)

போர், உள்நாட்டுப்போர், இயற்கை அனர்த்தங்கள் நிலவும் நாடுகளில் தற்போது சுமார் 4 மில்லியனுக்கும் அதிகமான சிறுவர்கள் கல்வி, சுகாதாரம், உணவு, உடை, வதிவிடம் போன்ற அடிப்படை வசதிகள் இல்லாமல் வாழ்கிறார்கள். இவர்களில் பெரும்பான்மையோர் அகதிமுகாம்களில்தான் வாழ்கிறார்கள் எனவும் ஐக்கியநாடுகள் சிறுவர் பாதுகாப்பு அமைப்பு அறிவித்துள்ளது.

(2)

சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம், சிறுவர் தொழிலாளர், சிறுவயது திருமணம், சிறுவர்கடத்தல், சிறுவர் கொத்தடிமை, சிறுவர் விற்பனை, சிறுவர் பிச்சை எடுத்தல், சிறுவயதில் கர்ப்பம் தரித்தல்,தெருக்களில் வசிக்கும் சிறுவர், சிறுவர் கல்வியின்மை போன்ற பல விடையங்களில் உலகில் இந்தியாதான் முதலிடம் வகிக்கின்றது என உலக சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் வருடாந்த அறிக்கை தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கவிதைகள்....

## தோல்வியைத் துரத்து...

யானைக்கும் அடி சறுக்குமாம்
யானை அதுக்கு வருந்துமோ
யானை எழுந்து நடக்குமாம்
அடுத்த வெற்றி கிடைக்குமாம்...

தவழும் குழந்தை எழுந்திடும்
தத்தித் தத்தி நடந்திடும்
தவறிக் கீழே விழுந்திடும்
தானே மீண்டும் நடந்திடும்...

விழுந்து விட்டால் அழுவதோ
வேக வேகம் ஆகவே
எழுந்து நடக்க வேண்டுமே
என்று வெற்றி தோன்றுமே...

தோல்வியில்தானே வெற்றியின்
சூத்திரம் தன்னை அறியாமல்
தோல்வியில் எழுந்த வெற்றியை
துடிப்புடன் தேடக் கிடைக்குமே!..

செல்வன் தே லோசன்
திருஞானசம்பந்தர்"குருகுலம்"
கழுதாவளை

## நட்பு...

நட்பு என்பது மலரைப்போல அல்ல
ஒரு நாளில் பூத்து உதிர்வதற்கு
அது வானில் இருக்கும் நட்சத்திரம்
வானம் இருக்கும்வரை இருக்கும்
இதுவே உண்மையான நட்பு...

எத்தனை உணர்வுகள்
நம்மைவிட்டுப் பிரிந்தாலும்
வலிக்காத இதயம் ஏன்வலிக்கிறது
ஒரு நட்பின் பிரிவின்போது
ஏன் என்றால்
நட்பு என்பது உறவல்ல
இரத்தத்தில் ஊற்றெடுத்து
உயிரோடு உறவாடும்
உண்மையான உணர்வுகள்...

நல்ல நண்பனிடம்
எவ்வளவோ கோபம் காட்டலாம்
ஒரு நிமிடம் கூட
சந்தேகப்படக் கூடாது...

நட்பு என்பது யாராலும்
அழிக்க முடியாத பந்தம்
சுமையானது அல்ல
என்றும் சுகமானது!...

செல்வன் ச.தனுஷ்காந்தன்
திருஞானசம்பந்தர் "குருகுலம்"
கழுதாவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 21

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 8 | 3 | | | | |
| | | | | 7 | 4 | | 5 | |
| | | | | | | | | |
| | | 4 | | | 6 | | | 8 |
| 2 | | | | 8 | | | | 9 |
| | 6 | | 1 | | 2 | 4 | | |
| | | 5 | 7 | | | 9 | | 3 |
| 9 | 8 | | | | | | | 5 |
| | | 1 | | 6 | 5 | | | 4 |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 114
## (புரட்டாதி-ஐப்பசி - 2020)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01– 03 மாணவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பது இதுதான்.

11– 12 வீட்டு மிருகம்.

வ – இ:

04– 03 சில மாணவர்கள் இது எழுதுவதில் வல்லவர்கள்.

15– 13 இந்த மிருகம் மாமிசங்களை விரும்பி உண்ணும்.

கீ – மே:

07– 03 வீட்டுத்திறப்புக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.

10– 02 கல்வியை இது போன்றது என்றும் கூறுவார்கள்.

மே – கீ:

01– 13 உடைந்தால் ஒட்டமுடியாதது.

04– 16 தற்போது மாணவர் இது எழுதுவதும் குறைந்து வருகின்றது.

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நல்ல நட்பை வளர்த்துக் கொள்ளச் சில வழிகள்....

01. தேவைப்படும்போது உங்கள் நண்பருக்குத் தகுந்த ஆலோசனை சொல்லுங்கள்.

02. கூட்டத்தில் ஒரே நண்பருடன் பேசிப் கொண்டிருப்பதற்குப் பதில் மற்றவர்களையும் நண்பராக்க முயற்சி செய்யுங்கள்.

03. இயற்கையாகவே நட்பு உருவாகட்டும். வலிந்துபோய் நட்பைத் திணிக்காதீர்கள்.

04. புதிய இடத்தில் வெட்கப்பட்டு ஒதுங்கி நிற்காதீர்கள். உண்மையா நட்புணர்வோடு பழகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் தோற்றத்தைப் பார்த்துக்கூட நட்பு உருவாகலாம்.

05. உங்களைப் பற்றி நீங்களே அதிகமாகப் புகழ்ந்து பேசாதீர்கள். தற்பெருமை பேசுபவர் என்று உங்களை மற்றவர்கள் ஒதுக்கி வைத்துவிடுவார்கள்.

06. நண்பர்கள் வட்டத்தில் நீங்கள் தான் எப்போதும் தலைவர் என்பது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

07. நண்பர்களுக்குத் தேவையில்லாமல் கட்டளையிடாதீர்கள். நண்பர்களிடம் வீண் அதிகாரம் செய்யாதீர்கள்.

08. பரிசுகள் கொடுத்தும், பணத்தைக் கொடுத்தும் நட்பை வளர்க்காதீர்கள். நட்புக்கு விலை பேசுவது முடிவில் பிரச்சனைகளை உருவாக்கிவிடும்.

09. நண்பர்களிடம் பேசும் போது "வளவள" என்று நீண்ட நேரம் பேசாதீர்கள்."அறுவைகேஸ்" என்று உங்களை ஒதுக்கிவிடுவார்கள்.

10. நட்புக்கு பொறுமை அவசியம் தேவை. விட்டுக்கொடுத்து வாழும் பழக்கம் நல்ல நட்பை உருவாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாப் பாடல்...

வீதிக்குச் செல்லாதே பாப்பா
வீட்டில் இருந்து விளையாடு பாப்பா
இடைவெளி கடைபிடி பாப்பா
கையை அடிக்கடி கழவு பாப்பா!...

கைலாகு கொடுக்காதே பாப்பா
வணக்கம் என்று சொல்லு பாப்பா
வீதி உணவை உண்ணாதே பாப்பா
வீணாக வெளியே போகாதே பாப்பா!..

மருத்துவத்தைக் கடைப்பிடி பாப்பா
மாமிசத்தை விட்டுவிடு பாப்பா
சுத்தமே சுகம்தரும் பாப்பா
கோரோனாவை விரட்டியடி பாப்பா!..

## அடிபற்றியமரபுத் தொடர்புகள்...

அடியொற்றுதல் - பின்பற்றுதல்
அடி நகர்தல் - இடம்பெயர்தல்
அடி பணிதல் - கீழ்பணிதல்
அடிப்படை - மூலாதாரம்
அடிவிளக்குதல் - தன் மரபைப் புகழ்பெறச் செய்தல்
அடியிடுதல் - ஆரம்பித்தல்

## கணக்குப் புதிர்....

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | − | | + | | =7 |
| − | | − | | − | |
| 3 | + | | + | | =9 |
| + | | − | | + | |
| | + | | + | | =3 |
| =3 | | =3 | | =3 | |

முயற்சி செய்துபாருங்கள் முடியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்ளுங்கள்...

-தமிழ்செல்வி-

1.உலகிலேயே அதிகம் பேருக்கு இருக்கும் பெயர் "முஹம்மது"

2. உடலின் மிக வலிமையான சதைப்பகுதி "நாக்கு"

.

3. ஆங்கில கீபோர்டில் ஒரேவரிசையில் அதிக எழுத்துக்கள் பயன்படுத்தப்படும் ஒரு சொல் "TYPEWRITER"

.

4. அதே போன்று இடது கையினால் மட்டும் டைப் செய்யப்படும் நீண்ட வார்த்தை 'Stewardesses"

.

5. உலகில் மனிதர்கள் அதிகமாக இறப்பதற்கு காரணமாகும் ஜீவராசி – "கொசு" (நுளம்பு)

6. Sixth Sick Sheik's Sixth Sheep's Sick - இதுவே ஆங்கிலத்தில் மிகவும் கடினமான "Tongue Twister"

.

7. 111,111,111 ஐ திரும்ப 111,111,111 ஆல் (111,111,111 x 111,111,111) பெருக்கினால் 12,345,678,987,654,321 என்ற விந்தையான கூட்டுத்தொகை வரும்.

.

8. எப்போதும் கெட்டுப்போகாத ஒரே உணவு "தேன்"

.

9. தீப்பெட்டி கண்டுபிடிப்பதற்கு முன்பே சிகரெட் லைட்டர் கண்டுபிடிக்கப்பட்டது.

.

10. வானத்தை நிமிர்ந்து பார்க்க இயலாத ஒரே விலங்கு "பன்றி"

.

11. தும்மும் போது 'நன்றாய் இரு' "இறைவனுக்கு நன்றி" என்று சொல்லக் கேட்டிருப்போம்., ஆமாம் உண்மையில் தும்மும் போது இதயம் ஒரு "மில்லி செகண்ட்" நிற்குதாம்.

.

12. பூமியின் எடை 5,972,000,000,000,000,000,000 டன்கள்.

13. இந்த வருடம் உலகம் முழுவதும் கூடுதலாக உச்சரிக்கப்பட்ட சொல் "கொரோனா" வைரஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் நாம் தேடும் போது நமக்கு கிடைத்த ஒரு அரிய விடயத்தை உங்களுடன் பகிர்கிறோம்.

1 – ஒன்று
3/4 – முக்கால்
1/2 – அரை
1/4 – கால்
1/5 – நாலுமா
3/16 – மூன்று வீசம்
3/20 – மூன்றுமா
1/8 – அரைக்கால்
1/10 – இருமா
1/16 – மாகாணி(வீசம்)
1/20 – ஒருமா
3/64 – முக்கால்வீசம்
3/80 – முக்காணி
1/32 – அரைவீசம்
1/40 – அரைமா
1/64 – கால் வீசம்
1/80 – காணி
3/320 – அரைக்காணி முந்திரி
1/160 – அரைக்காணி
1/320 – முந்திரி
1/102400 – கீழ்முந்திரி
1/2150400 – இம்மி
1/23654400 – மும்மி
1/165580800 – அணு
1/1490227200 – குணம்
1/7451136000 – பந்தம்
1/44706816000 – பாகம்
1/312947712000 – விந்தம்
1/5320111104000 – நாகவிந்தம்
1/74481555456000 – சிந்தை
1/489631109120000 – கதிர்முனை
1/9585244364800000 – குரல்வளைப்படி
1/575114661888000000 – வெள்ளம்
1/57511466188800000000 – நுண்மணல்
1/2323824530227200000000 – தேர்த்துகள்.

இவ்வளவு நுண்ணியமான கணிதம் அந்தக் காலத்தில் பயன்பாட்டில் இருந்துள்ளது. இந்த எண்களை வைத்து எத்தனை துல்லியமான வேலைகள் நடந்திருக்கும் என்று எண்ணிப்பாருங்கள், கணினியையும், கணிதப் பொறியையும் கூறிக்கொண்டு இருக்கும் போது....

அன்புடன் தமிழன்பன் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

வலியறிதல்: –

471. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

472. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

473. உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

474. அமைந்தாங் கொழுகா னளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

475. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுந்துப் பெயின்.

476. நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

477. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வணங்கு நெறி.

478. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.

479. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
வில்லாகித் தோற்றாக் கெடும்.

480. உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும் (வலிமையைக் கண்டறிதல்)

471. தான் செய்யக் கருதும் தொழிலின் திறத்தையும், தன் திறத்தையும், தன் பகைவன் திறத்தையும் இருவரின் உதவியின் திறத்தையும் ஆராய்ந்து செயற்படவேண்டும்.

472. தன்னால் முடியும் செயலை அறிந்து அதற்காக அறியவேண்டிய வலிமையையும் அறிந்து, அச்செயலில் மனதைச் செலுத்தி முயல்பவருக்கு முடியாத செயல் எதுவுமில்லை.

473. தன் வலிமையை அறியாமல் மனத்தூண்டுதலால் வலிய வினையைத் தொடங்கி அதை முடிக்க முடியாமல் இடையில் விட்டவர் உலகில் பலர் உண்டு.

474. பிறருடன் சேர்ந்து வாழாமலும், தன் வலிமையை அறியாமலும் தன்னை வியந்து செயற்படுபவன் விரைவில் கெடுவான்.

475. மெல்லிய மயில் தோகையையும் அளவுகடந்து வண்டியில் ஏற்றினால் அச்சு முறியும். அதுபோல எளியர் என்று பலருடன் பகைத்தவன் வலிமையற்று அழிவான்.

476. மரத்தின் உச்சிக் கொம்பில் ஏறியவன் மேலும் ஏற முயன்றால் அவனது உயிருக்கு முடிவு ஏற்படும். அதுபோல பகைமேல் செல்பவன் மன எழுச்சியால் மேலும் சென்றால் அழிவு நேரும்.

477. தன்னிடமுள்ள பொருளின் நிலை அறிந்து பிறருக்குக் கொடுக்க வேண்டும். அதுவே தன் பொருளைக் காக்கும் வழியாகும்.

478. பொருள் வரும் வழி அளவானதானாலும் கேடில்லை. அப்பொருள் செல்லும் வழி பெருகாதிருக்க வேண்டும்.

479. தன்னிடமுள்ள பொருளின் அளவை அறிந்து செயற்படாதவன் வாழ்க்கையானது உள்ளது போல தோன்றிக் கெட்டுவிடும்.

480. தன்னிடமுள்ள பொருளின் அளவை ஆராயாமல் ஒப்புரவு செய்பவனுடைய செல்வத்தின் அளவு விரைவில் கெடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



## நட்பு....

கடலோரத்தில் நண்டு நடந்து கொண்டிருந்தது. மணலில் பதிந்த நண்டின் கால்த்தடத்தை அலை அழித்துக்கொண்டே இருந்தது. நண்டுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒருநாள் நரி கடற்கரை ஓரம் நண்டின் கால்த்தடம் இருக்கிறதா என்று தேடி அலைந்தது. வளைக்குள் இருந்து ஓரக்கண்ணால் எட்டிப் பார்த்த நண்டுக்கு அலை தன் கால்த்தடத்தை அழித்த காரணம் இப்போதுதான் தெளிவானது. அலையின் நட்பை அடிமனத்தால் போற்றியது நண்டு. தனக்குள்ளே அது சொல்லிக் கொண்டது.

" முன்பே காப்பான் அன்பே நட்பு"

## முகவரி.....

மழை...
"வழங்கும் வானமே நீ வாழ்க" என்று நான்கு திசைகளும் வானத்தை வாழ்த்தின.
காற்றுக்கு...
சினம் பொங்கியது. " என்ன கொடுமை!.. வானமா வழங்கியது?"
பூமிக்காகக் காற்று பொருமியது.

"நீர் கொடுப்பதோ பூமி பேர் எடுப்பதோ வானம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி-177
## (புரட்டாதி-ஐப்பசி -2020)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ-வ**

01-05 இலங்கையில் இவரின் ஆட்சி நடைபெறுகின்றது.

11- 14 தர்மத்தைப் போதித்த மகான்.

15-18 உருவங்களில் ஒன்று.

19-20 பசித்தாலும் இது புல்லைத் தின்னாது. அது எது.

25-28 வீட்டில் ஒரு உறவுக்காரர்.

40-41 இது வந்தால் அத்தனையும் மறந்துவிடுவோம்.

45-48 ஆவணிமாதம் இலங்கையில் இது நடந்து முடிந்தது.

**வ-இ**

07-05 இதைத் தீட்டாமல் உன் புத்தியைத் தீட்டு.

11 -09 திரவப்பொருட்கள் அளக்க இதையும் பயன்படுத்துவார்கள்.

25-22 கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு பிரதேசம்.

35-33 சில கழிவுப்பொருட்களை இதில் கொட்டுவதாலும் சூழலுக்குக்கேடு.

49-48 ஊட்டச் சத்து நிறைந்தது. அது எது.

**கீ.மே**

19-05 அறிவு என்றும் கூறலாம்.

40-33 உடற்பாகங்களில் ஒன்று.

43-22 மகள் ஒத்த சொல்.

45-31 ஆண்டவனுக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.

49-28 பாடகி எதிர்பாற் சொல்.

**மே-கீ**

01-22 தை மாதத்தை ஆங்கிலத்தில் இப்படி அழைப்பார்கள்.

07-28 கொடைக்குப் பெயர் போனவன்.

23-44 நம் நாட்டுப் பாவனைப் பொருள் ஒன்று.

25-39 சில புகழ்விரும்பிகள் இதுக்காக அலைவர்கள்.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனிக்கல்வி....

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்பது ஔவையார் வாக்கு. கல்வி என்பது நமது இரு கண்களைப் போன்றது. கல்வியைப் பெறாதவர்கள் கண்ணிருந்தும் குருடர்களாகவே மதிக்கப்படுவார்கள். அதுவும் இந்த நூற்றாண்டில் கணனிக்கல்வி தெரியாதோர் அறியாதோராகவே கருதப்படுவர். இன்று உலகம் அறிவியல் வளர்ச்சியில் மிகவும் சுருங்கிவிட்டது. கணனியின் சிறப்பான சாதனையால் எத்தனையோ நன்மைகள் விளைகின்றன. நவீன தகவல் தொடர்புச்சாதனங்கள் மூலம் நேரமும் பொருளாதாரமும் சேமிக்கப்படும்.

இன்று கணனிக்கருவி இல்லாத இடமே இல்லை என்று சொல்லும் அளவில் கணனியின் தேவையும் அதன் அவசியமும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. இன்று கணனி பயன்படாத துறைகளே இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. வருங்காலத்தில் கணனிக்கருவி இல்லாமல் எந்தத் தொழிலும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டாலும் வியப்படைவதற்கு இல்லை. அந்த அளவிற்கு கணனியின் முக்கியத்துவம் உலகெங்கும் பரவியுள்ளது.

வெறும் ஏட்டுக் கல்வியை வைத்துக்கொண்டு வாழ்ந்துவிடலாமென்ற நிலை மாறிவிட்டது. காலப்போக்கிற்கு ஏற்ப நம்மையும் மாற்றிக்கொள்ள வேண்டும். காலத்தின் கட்டாயம் இதுவாகும்.. வேலைவாய்ப்பு, சுயதொழில், வருமானம், பொருளாதார முன்னேற்றம் என்றும் நான்கு அம்சங்களையும் பூர்த்திசெய்கிற ஒரு அடிப்படை ஆதாரமாகக் கணனிக்கல்வி விளங்குகின்றது. கணனிக்கல்வி கற்றோருக்கு இன்று வேலைவாய்ப்புகள் அதிகமாக உள்ளன. உலகின் எந்த மூலையிலும் வேலைவாய்ப்புக்கள் தேடி வருகின்றன. கணனிக்கல்வியின் மூலம் அதிக வருமானமும் பெறமுடியும்.

வெறும் கணக்குப்போடத்தான் கணனி உதவும் என்று கருதிய காலம் மறைந்துவிட்டது. சகல துறைகளிலும் கணனியின் துணைகொண்டு ஒப்பற்ற பணிகளை ஆற்றமுடியும் என்பது உறுதியாகிவிட்டது. பொறியியல், மருத்துவம், வணிகம், வங்கி, கல்வி, வானியல் போன்ற பல்வேறு துறைகளில் கணனியின் பயன்பாடு ஒப்பற்றதாகிவிட்டது என்பது உண்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனியன் வரவானது மனிதரின் சிந்தனைத்திறனை வளர்த்துவிடும் வகையில் உள்ளது. இன்றைய நவீன உலகில் நாளுக்குநாள் மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணமே உள்ளன. இம்மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவை. அந்த மாற்றங்களுக்கு ஏற்ப நம்மைத் தயார்படுத்திக் கொள்வது காலத்தின் கட்டாயமாகும். இதனைக் கருத்திற்கொண்டு ஒவ்வொருவரும் கணனிக் கல்வியில் நாட்டம் கொள்ள வேண்டும். குறிப்பாக இன்றைய மாணவர்கள் கணனிக்கல்வியில் நல்ல தேர்ச்சிபெற முனையவேண்டும்.

வருங்காலச் சமூகம் வளமுடன் வாழக் கணனிக்கல்வி வீடுதோறும் பரவவேண்டும். மாற்றங்களை எதிர்கொள்ளும் சக்தியையும் திறனையும் பெற்றிடக் கணனிக்கல்வி இன்றியமையாதது என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். வீடும் நாடும் பயன்பெறக் கணனிக்கல்வி கை கொடுக்கும் என்பதை மறத்தலாகாது!..

செல்வன் வி.விதுர்சன்
திருஞானசம்பந்தர் குருகுலம்
களுதாவளை-மட்டக்களப்பு

---

# பாரதியும் பாரதிதாசனும்....

இருபதாம் நூற்றாண்டு தமிழ்க்கவிதைக்கு வசந்தகாலம். இந்தக் காலத்தின் வடிவத்திலும் வண்ணத்திலும் வாசத்திலும் வகை..வகையான புதிய கவிதைப்பூக்கள் தமிழில் மலர்ந்தன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலேயே இந்த வசந்தத்தைப்பாடும் குயிலாக பாரதியின் குரல் ஒலித்தது. அவனே இந்த வசந்தத்தின் முதல் பூப்பாகவும், அதைப்பாடிய முதல் குயிலாகவும் இருந்தான். புலவர்களின் யாப்புப் பெட்டிகளுக்குள் சிறைபட்டுக்கிடந்த கவிதைகளை அவன்தான் மக்களின் பொதுவுடமை ஆக்கினான்.

அவன் மக்களிடம் பேச விரும்பினான். எனவே எளிமையைக் கையாண்டான். பழம் புலவர்களின் விருத்தங்களைவிட மக்கள் பாடலான சிந்து வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தான். அது மட்டுமல்ல தமிழ் வசனக்கவிதைக்கு அவனே முதல் விதை தூவினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல இனிதாவது எங்கும் காணோம்" என்று முழங்கிய முண்டாசுக்கவி அரசியல் விடுதலையையும் சமூக விடுதலையையும் அதன் அங்கமான பெண் விடுதலையையும் உரத்துப் பாடினான்.

" ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் "

பாரதியின் நெருப்பில் ஏற்பட்ட தீப்பந்தம் பாரதிதாசன். கவிதைப் பெண்ணை விடுதலை செய்தவன் பாராதி. அந்தப் பெண்ணை ஆணாக்கி அவள் கையில் ஆயுதமும் தந்தவர் பாரதிதாசன். பெரியாரின் சுயமரியாதைக் கருத்துக்கள் பாரதிதாசன் என்ற அக்கினி வீணையின் பாடல்களாக எழுந்தன. " வெற் கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள்களாக வெங்குருதி தனில் கமழ்ந்து வீரம் செய்கின்ற தமிழாக" என அவர் கவிதைகள் உக்கிர தாண்டவம் ஆடின.

சமூக சீர்திருத்தத்தையும் தமிழ்க்காதலையும் அவர் கவிதைக் காவடியாக ஏந்திக்கொண்டிருந்தது. " தனிமைச் சுவையுள்ள சொல்லை எங்கள் தமிழினும் வேறெங்கும் யாங் கண்டதில்லை " என்று பாரதிதாசன் தமிழின் சுவையில் மூழ்கி எழுந்து முழங்கியுள்ளார்.

பாரதி கூடத்தொடாத விதவை மறுமணம் பற்றியும் குழந்தை மணக்கொடுமை பற்றியும் அவர் பாடினார். அவருடைய காதல் கவிதைகள் கூட சமூக சீர்திருத்தம் பற்றிய, தமிழ்ப்பற்று பற்றிய பிரச்சாரக் கருவிகளாகவே அமைந்தன. குடும்பத்தின் அன்றாடச் செயல்கள்கூட அவர் கைபட்டுக் கவிதையாக மலர்ந்தன. " எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நகர்கின்றதிந்த வையகம்" என்று சமவுடமை சமூதாயத்திற்கு அவர் வரவேற்பளித்தார்.

இப்பாவலர்களின் பெருமை பற்றிப் எந்நாளும் பேசலாம். ஆனால் இந்தத் தமிழ் உலகிற்கு இவர்கள் படைத்த கவி வரிகளோ என்றும் உயிர்ப்புடன் வாழ்ந்துகொண்டே இருக்கும். வாழ்க இருவரின் நாமங்கள்!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று புதிதாய்ப் பிறந்தேன்.....

## கடவுள் எந்த மதம்?

கடவுள் எங்கள் மதம் என
கிறிஸ்துவர்கள் யூதர்கள்
இந்துக்கள் இஸ்லாமியர்கள்
பௌத்தர்கள்
காலந்தோறும் சொந்தம்
கொண்டாடுகிறார்கள்..
இல்லாதக் கடவுளுக்கு ஏதுமதம்?
கேலிபேசினார்கள்
நாத்திகவாதிகள்!
காற்று கடல் தீ இயற்கை
எனக் கற்பனைக் கடவுளை
வளர்த்தவர்கள் ஆன்மிகவாதிகள்!
இல்லாமலும் இருக்கிறான்
இருப்பதிலும் இல்லாமல்
இருக்கிறான் இருப்பதும்
இல்லாமல் இருப்பதும்
திருவிளையாடல் என்கிறது
மெய்ஞானம்..
ஒவ்வொருபடைப்பிலும்
கடவுள் வாழ்கிறார் மல்லிகைப்
பூவிலும் கடவுள் மணக்கிறார்
உலக மொழிகளில் கடவுள்
பேசுகிறார் உலவும் உயிர்களில்
கடவுள் உறைகிறார்
நிலவின் ஒளியில்
கடவுள்சிரிக்கிறார்
என கவிஞன் பாடுகிறான்..!
மத அங்கி அணியாத கடவுள்
பூணூல் போடாமல் கனவில்
மட்டும் கற்பனையாக
வந்து வந்து போகிறார்!.....

ஏ எஸ் பிரான்சிஸ்

## வா வசந்தமே

வா வா வந்துவிடு வசந்தமே!
கோடை கால ஆட்சியில்
கோலமகள் மயில்கள்
நடனமாட மறந்தன
காதல் கிளிகள் கொஞ்சிபேச
வார்த்தைகளின்றி தவித்தன..
போ போ கோடையே நீ போ!
வண்ண மலர்கள்
வாடி தவிக்கின்றன
கன்ன மலர்களில்
கண்ணீர்த் துளிகள்
வழிந்தோட வழி தெரியாமல்
தடுமாறுகின்றன..!
வானம் கருமேக வாசலைத்
திறந்ததும் அருவியாக
கொட்டிய நீரில் இயற்கை
புன்முறுவலோடு நிர்வாணமாய்
குளித்துக் களித்தது..!

ஏ எஸ் பிரான்சிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவு.....

விதி செய்த மாயமாகி என்னை விட்டு
பிரிந்து சென்ற என் அண்ணனே!
காற்றிலே உன் குரல் கேட்கின்றது
சுற்றிச் சுழன்று உன்னை
தேடினேன் காணவில்லை
அன்புடன் பட்டாம் பூச்சியாய்
இவ்வுலகை வலம் வந்தோம்.
பலகுறும்புகள்
சில செல்லச்சண்டைகள்
அரவணைக்கும் அன்பு
அதிகாரத்துடன் கூடிய கண்டிப்பு
அன்போடு அறிவையும்
பாசத்தோடு பல பண்பையும்
தன்னம்பிக்கையோடு
வாழ வைத்த - உன்னை
இன்னும் தேடுகின்றேன்
இறுதிவரை- என்
கண்களில் காணவில்லை
உன்னை
உன் அன்பிற்கு ஈடாக
அதேஒரு உறவு வந்தாலும் கூட
உன் அன்புக்கு இணையாக
அந்த அன்பையும்
அரவணைப்பையும் தரமுடியாது
அண்ணா.

செல்வி S லொறண்ரினா

## அன்பு.....

அன்பு என்ற ஒன்று இல்லை என்றால்
உலகமே அர்த்தம் அற்றதாய்
போய்விடும் - ஆனால்
அன்பே உலகம் என்று நினைத்தால்
வெறுத்து விடும்.
சிறு சிறு அன்பான சண்டை போட்டு
புரிந்து கொண்ட அன்பு
செய்தவர்களைவிட
புரிந்து கொள்ளாமல்
பிரிந்து சென்றவர்களே அதிகம்.
கடல் அளவு அன்பு கொண்ட
இதயங்களுக்கு இல்லாதவரம்
கடுகளவு அன்பு கொண்ட
இதயங்களுக்கு கிடைக்கிறது.

செல்வி து சாலினி

இரு கவிதைகளையும் தந்த இருவரும் தலைமன்னார் "செபமாலை" சிறுவர் இல்லத்தைச் சேர்ந்தவர்கள்..

நன்றிகள்!....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பும் அறனுமே...

-ப.பசுபதிராசா-

இயற்கை தந்த மகத்துவம் தொலைந்து
இதயங்கள் அழுது புலம்பும் காலம்- நன்
நெறிகளைத் தொலைத்து நிற்பதனாலே - மனிதா
உன் நிழலும் மிதிக்கும் இழிநிலைக் கோலம்!...

ஆளுக்கொரு நீதி சொல்லி அனுதினமும்
கூளுக்கும் கவிபாடும் வெறும் துதி மதிக்கூட்டம்
தோளுக்கு மீறிய தொல்லைகள் சுமந்து
இன்று அழுவதனால் இங்கு யாருக்கு லாபம்!...

எல்லா உயிர்களும் சமமாய் வாழ
இயற்கை செய்த இன்ப அதிசயம் -பூமி
பொல்லாமை சுமந்த வீண் போக்குகளாலே
நல்லாண்மை இழந்து நடு வீதியில் நாசம்!...

குணத்தையும் கோலாகலமாய்க் கூடி வாழ்வதையும்
அகிலத்தில் அன்புடன் வைத்தவன் இறைவன்
பணத்தையும் பாவச் செயல்களையும் - இங்கு
விளைபொருளாக்கி நடுவீதியில் வைத்தவன் மனிதன்!...

கண்ணிடை ஈரம் கொட்டிடும் பசுமை மரங்கள்
கணக்கற்று விரிந்து மழை கொட்டிடும் வானம்
எப்பயிராலும் நம் பசிபோக்கிட நீண்டுகிடக்கும் நிலம்
அத்தனையும் அழித்து பித்தனாய் போவது
துன்பத்தைக் கட்டிச் சுமப்பது நாடு!...

அன்பும் அறிவும்தான் நீ போக வேண்டிய வழி
பண்பும் பயமுமாய் பாதை காண்பது நன்னெறி
மனிதனை வேண்டாமென முடிவெடுத்துவிட்டால் பூமி
தடுப்பதற்கு இங்கு எவருமில்லை சாமி!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மண் சஞ்சிகையின் 202வது இதழ் அட்டடைப்படத்துக்கானகவிதை.**

கனிந்துவந்த காலமெல்லாம் மெல்லக் களவுபோனது
கசந்துபோன உள்ளத்தினால் உலகு கலங்கிநிற்கிறது
நிகழுகின்ற இழப்புகள் பெருகிநித்தம் நீட்சியாகுது
நித்திலமே பீதியினால் நிலைகுலைந்து தவிக்குது..

தனிமனித ஒழுக்கமும் தர்மமும் தவறித்தான் போனது
தரணியின்று பேரழிவினாவால் தடுமாறித் தத்தளிக்குது
இனியென்று விடிவுவரும் என ஏக்கத்தில் வினவுகிறது
இழந்துவிடும் உயிர்க்கணிப்பு இமயத்தைத் தொடுகிறது..

புனிதமான பூமியைக்காண போதனைகள் நீளுகின்றது
புரிதலில்லா மானிடமின்னும் புவியைமறந்து குதிக்கிறது
பனிப்படர்வாய் கோவிட்19 இந்தப்பாரினைச் சூழ்கின்றது
பணத்தினிலே மோகங்கொண்டு நிதம் பணியென்றோடுது

கனிவும் பணிவும் கட்டுப்பாடுகளும் நிதம் காணாமற்போனது
கண்ணீருடனே பூவுலகின்று கலங்கிநின்றே அழுகின்றது
அணிவகுக்கும் மொழிகளில் அத்தனை அழுத்தமானது
அதிகம் உதடுகள் உச்சரிக்கும் சொல் கொரோனாவானது

**அம்பலவன் புவனேந்திரன்..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி எனும் பாரதத் தீ..!

- அம்பலவன்புவனேந்திரன் -

வண்டாடும் வண்ணத்தமிழின் வளத்தினாலும் உரத்தாலும்
வாய்களுக்குள் இனிமை சுரக்கும் வாய்மையாய் சுகம்பயக்க
கொண்டாடிக் குதூகலிக்கும் குமிண் தமிழை உலகறிந்திட
குவலயத் தமிழரெல்லாம் கூகிள் வரை நுளைத்தவேளை
முண்டாசுக்கவிஞனை முழுவுலகும் நினைவிருத்தியவன்
முதற்கனவுபலித்திட எம்முயற்சி நனவாகி ஒளிர்கிறதே...

செண்டுக்குள் நறுமணமாய் செம்மொழியாய் கமழுகின்ற
சீதளத்தாய் வாய்மொழியை சிரமேற்கொண்ட புலவர்களுள்
கண்டங்கள் தாண்டியே காலங்களைக்கடந்து வென்றன்று
கனவுகளை விதைத்து காலத்தால் நனவாக்கியவனின்
பண்டைத்தமிழுக்குப் பரிவட்டம் கட்டிக் கௌரவித்திட்ட
பல்லாயிரமல் கவிஞருள்ளே பாரதிமட்டுமே பரிதியானான்...

ஆண்டவனாய் போற்றுகின்ற அவதாரமாம் இராமன்கதையை
அவனிக்களித்த கம்பனாடனை அதிகம்பேர் போற்றவில்லை
பாண்டவரின் கதையாய்ப்பேசும் மகாபாரதத்தை ஆக்கியவரை
பாரில்பாலர் அறிந்திருந்தும் பற்றுக்கொண்டு வாழ்த்தவில்லை
வேண்டாத ஜாதிக்கொழுத்திட விழிவெள்ளியாய் எரிந்திட்ட
வித்தகக்கவிபாரதியை வியனுலகு என்றும் கொண்டாடுகிறதே...

தாண்டிவந்த காலச்சுவட்டில் தரணியில் பல்லாயிரம் பாவலர்கள்
தமிழுக்கும் இலக்கியத்துக்கும் தமையீந்து நின்ற போதினிலும்
பாண்டிச்சேரியில் மறைந்திருந்தும் பத்திரிகையை வெளியிட்டு
பறங்கியரின் விழிகளுக்குள்ளே பத்து விரல்ளையே நுழைத்த
தூண்டாமணி விளக்காய் வறுமை துன்பத்திலும் இன்பமாய்
தூர்ந்திடாதது சுதந்திரத்துக்குழைத்த தாரிகை போற்றுவோமே...

பெண்டாளும் தைரியத்தை தன்பாக்களுக்குள் புதைத்தவன்
பேரராற்றல் கொண்டபலருள் பெருமையோடு உயர்ந்தவன்
திண்டாடும் வாழ்வில் விடுபட தினவெடுத்தபாடல் யாத்தவன்
தீராதஅறிவுச்செல்வத்தை திசையெங்கும் திரட்டசெய்தவன்
சண்டாளர்களை எதிர்த்து சாதியத்தை நடுக்கியன்தான்
சரித்திரமாய் வாழமெங்கள் சாகா மகாகவிஞனை ஏற்றுவோம்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்பிழுத்த குரங்கு...

சோகம் யாரை விட்டது?
சிலர் வாழ்வது போலே
நடிப்பார்கள்
சிலர் சாவோடே வாழ்வார்கள்
தினம் தினம் மரணவலியில்
துடிப்பவரும் உண்டு
தினமும் ஆறா துயரில்
அழுபவரும் உண்டு
முகத்தில் சிரிப்பைக் காட்டி
நெஞ்சில் வேதனையை
சுமபவர் பலர் உண்டு
மனம் கல்லாய் மரத்தவர்
பலர் உண்டு
வாழ்வை வெறுத்துச்சன்னியாசம்
பூண்டவர் சிலர் உண்டு
ஊருக்காக உறவுகளுக்காக
பேருக்காய் வாழ்பர்
எத்தனைபேரு?
மனமுவந்து மனமொத்து
வாழ்பவர்தான் யார் உண்டு?
ஆப்பிழத்த குரங்கு போலே
அவதிபடுவோரோ அதிகமுண்டு
சாவில்லா வீடும் இல்லை
கண்ணீர் இல்லா
கண்களும் இல்லை
துயரம் இல்லா
நெஞ்சமும் இல்லை
தொல்லைகள் இல்லாமல்
மனித வாழ்க்கை இல்லை
போனால் போகட்டும் போடாஎன்று
நினைத்துவிட்டால் நின்மதியுண்டு!

கவி மீனா

# உங்களை ஏறி மிதித்து...

சென்றவர்களை...
மற்றவர்கள் முன்
உங்களை அவமதித்தவர்களை..
உங்கள் தோளில்
சாய்ந்துக்கொண்டு
உங்கள் முதுகில்குத்தியவர்களை...
வேண்டும் என்று உங்கள் மீது
வீண் பழி சுமத்தியவர்களை ...
தங்கள் தேவை முடிந்ததும்
விலகியவர்களை... உங்கள்
கூடவே இருந்து உங்களை
ஏமாற்றியவர்களை.. நல்லவர்கள்
என்று தங்களைத் தாங்களே
நிரூபிப்பவர்களை...
அழ வைத்தவர்களை..
நம்பிக்கை துரோகிகளை...
மறக்காமல் ஞாபகம் வைத்துக்
கொள்ளுங்கள். ஏனென்றால்
ஏதோ ஒருநாள் இவர்கள்
உங்களிடம் திரும்பி வருவதற்கு
சந்தர்ப்பம் இருக்கிறது ! ஆனால்
இப்படியானவர்கள் திருந்துவதற்கு
வாய்ப்பு இல்லை...

Book Name -
"நீ யாருக்காக உயிர் வாழ்கிறாய்"

நெடுந்தீவு முகிலன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகிம்சைத்திலீபனுக்கு அகவை முப்பத்திமூன்றா?....



-வசந்தா ஜெகதீசன்

ஆழமான கருவோடு ஆயுதத்தின் வலுவோடு
போராடும் தேசத்தின் புதுப்பாதை பயணிக்க
உயிரான தியாகத்தை உருக்குலைந்திடும் வாழ்வினை
அகிம்சையின் நெறியாக்கி அறப்போரின் வலுவாக்கி
பயணித்த திலீப வீரனே பறை சாற்றிய தோழனே...

மரணித்து ஆண்டுகள் முப்பத்திமூன்றா
மறுக்கிறது மனது நினைக்கிறது நினைவு
நேற்று நீ எம்மோடு நல்லூரின் வீதியில்
ஈர் ஆறு தினங்கள் இருந்ததாய் உணர்வோடு
ஈழத்தின் மீட்பிற்காய் வேரான வேங்கையே...

அடிமை வாழ்வும் அந்நியப் படையும்
அகற்றிட வேண்டியே அறைகூவல் விடுத்தாய்
ஐந்தம்சக் கோரிக்கை எமக்கெனத் தொடுத்தாய்
உயிரையே எமக்கெனத் தியாகமாய் எரித்தாய்...

உண்ணா நோன்பாலே உலகையே அழைத்தாய்
விடுதலை வேட்கையே வெற்றியாய் கொண்டாய்
அறப்போரின் வழியிலே அகிம்சையை வென்றாய்
அண்ணல்தீலிபனே,வீரத்தின் முழக்கம் விண்ணெங்கும்
அதிரகாலத்தை வென்றிட்ட காவிய மைந்தா...

ஆண்டுகள் முப்பத்திமூன்று அகிம்சையின் தியாகமே
ஈழத்தின் இதயமாய் துடிக்குது நினைவு
நல்லூர் முன்றலில் ஈராறு பொழுது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் 85 கோடி பேர் சிறுநீரக நோயாளர்கள்...



உலகளவில் 85 கோடி மக்களுக்கு பற்பல காரணங்களால் சிறுநீரக நோய்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் நாள்பட்ட சிறுநீரக நோய்கள் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 24 இலட்சம் இறப்புகளை ஏற்படுத்துகின்றன. இறப்புக்கான ஆறாவது மிகப் பெரிய காரணமாக சிறுநீரக நோய்கள் உள்ளன.

வயது வந்தோரில் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்த நோய் பாதிப்பு 20 சதவீதமாக உயர்ந்துள்ளது. இதனால் சிறுநீரக நோய்களின் தாக்கமும் கடந்த 10 ஆண்டுகளில் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்தகங்களில் வாங்கும் மருந்துகள், சிறுநீரகங்களுக்கு தீங்கு விளைவிக்கும் தொற்றல்லாத நோய்களின் (நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம்) தாக்கம் போன்றன உடலுக்கு பாதிப்புகளை அதிகரிப்பதுடன் சிறுநீரக நோய்களையும் உருவாக்குகின்றன. நாள்பட்ட சிறுநீரக நோய்கள் உருவாக்கும் ஆபத்து ஆண்களைப் போலவே பெண்களிடமும் அதிகமாக உள்ளன.

திடீர் எடை அதிகரிப்பு, இரத்த சோகை, பலவீனம், சோர்வு, தொடர் சிறுநீர்த் தொற்று போன்றவை குழந்தைகளுக்கான சிறுநீரக நோய்களின் ஆரம்ப அறிகுறிகள் எனக் கூறும் மருத்துவர்கள், அதைக் கவனிக்கும் பொறுப்பும் கடமையும் பெற்றோருடையது எனவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுறுத்துகின்றனர். உடற்பயிற்சியின்மை, துரித உணவு, குறைந்த அளவு நீர் பருகுதல் போன்றவை குழந்தைகளின் சிறுநீரகங்களைப் பாதிக்கும் முக்கிய காரணிகளாகும்.

ஜோன்ஸ் ஹோப்கின்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் அண்மைக்கால ஆய்வுகள் 75 வயதுக்கு மேற்பட்டவர்களில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிடுகின்றன. வேகமாக மாறிவரும் வாழ்க்கை முறையில் வயதானவர்களைப் பாதிக்கும் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் ஆகியவை நாள்பட்ட சிறுநீரக நோய்க்கான ஆபத்துக் காரணிகளாக இருக்கின்றன.

சில மேலைநாடுகள் சிறுநீரகத்தில் புரதத்தின் அளவை அறியும் அல்புமின் சோதனையை வயதானவர்களுக்குப் பரிந்துரைக்கின்றன. இந்தச் சோதனை மூலம் சிறுநீரக பாதிப்பை ஆரம்ப நிலையிலேயே அறிந்து கொள்ளலாம்.

நீரிழிவு நோய், உடல் பருமன், உயர் இரத்த அழுத்தம் ஆகியவை நாள்பட்ட சிறுநீரக நோய்க்கான முக்கிய ஆபத்துக் காரணிகள். சிறுநீரக பாதிப்பு பெரும்பாலும் அறிகுறிகள் எதுவுமின்றி அல்லது சில அறிகுறிகளுடன் திடீரென உருவாகின்றன. நோய் பாதிக்கும் வரை தங்களிடம் அந்நோய் இருப்பதாக இந்த நோயாளிகளால் உணர முடிவதில்லை. மூச்சுத் திணறல், உடல் சோர்வு, நீர்க்கட்டு போன்ற அறிகுறிகளை அனுபவிக்கத் தொடங்கும் போது, ஒருவரின் சிறுநீரகச் செயல்பாடு 25 சதவீதம் அல்லது அதற்கும் குறைவாக குறைந்து விட்டது என்று அர்த்தம்.

இந்த முக்கிய உறுப்பின் செயலிழப்பைத் தவிர்ப்பதற்கான சிறந்த வழி ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வாழ்வதும், குறைந்த உப்புடன் ஆரோக்கியமான உணவை உட்கொள்வதுமாகும். சிறுநீரக நோய் குறித்த விழிப்புணர்வுதான் சிறுநீரக நோயைத் தடுப்பதற்கான அல்லது குறைப்பதற்கான முதல் படியாகும்.

தாமதமாக சிறுநீரக நோய் குறித்து அறிதல் நோயாளிகள் மருத்துவச் செலவு செய்ய வேண்டிய சூழலை உருவாக்குகிறது. இதனால் பலர் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் என்பது ஓர் ஆய்வு தெரிவிக்கும் உண்மை. அதிக உப்பில்லாத உணவு, தொடர் உடற்பயிற்சி, உடல் பரிசோதனை முதலான வாழ்க்கை முறை மாற்றம் மட்டுமே, சிறுநீரக நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான தற்போதைய தேவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பம் ஒரு கோயில்.....

(திருமதி ஜெயா நடேசன்)

மனித வாழ்க்கைக்கு ஒரு வசந்தம் குடும்பம் ஒரு கோயில். நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம். இப்படியான அழகான வரிகள் மனதிற்கு மகிழ்வை அளிக்கிறது. குடும்பங்கள், நட்புக்கள் தோழமையுடன் வாழ்ந்தால் சிறப்புத்தான். அன்றைய காலங்களில் இந்நிலைதான் இருந்தது. வலது காலை எடுத்து வைத்துத்தான் புதுமணத் தம்பதிகள் வாசற்படியைத் தாண்டுவார்கள். இல்லத்திற்கு விளக்கேற்றி பெருமையைத் தேடிக்கொள்வர். ஆனால் இன்று குடும்பங்கள் தடுமாறிப் போகின்றன. இவையெல்லாம் இன்று மறைந்தே போய்விட்டன.

இன்றைய திருமணங்கள் யாவும் கொட்டேல்களிலும் ஆடம்பரச் செலவுகளிலும் பெற்றோர்கள் நடாத்தி முடிக்கிறார்கள். இருந்தும் பிள்ளைகள் தங்கள் விருப்பத்தின்படி திருமணம் செய்து புரிந்துணர்வு இல்லாமல் விவாரத்து பிரிவினை என முடிகின்றது. முன்பு ஒரு வீட்டில் திருமணம் அல்லது வேறு ஒரு கொண்டாட்டம் என்றால் குடும்பத்தில் உறவுகளோடும் ஊரோடும் ஒன்றுகூடுவார்கள். செய்யவேண்டியது எல்லாம் தமது சொந்தக் குடும்பத்தின் பொறுப்புக்கள் மாதிரி அனைத்தையும் செய்து முடிப்பர்.

குறிப்பிட்ட குடும்பங்களின் பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள் என்போர் கூடியிருந்து சந்தோசமாகக் களிப்பார்கள். ஆனால் இன்று பிள்ளைகளுக்கே.. பிரிவுகள், உறவுகளுக்குள்ளே வேற்றுமைகள் ஏற்படுகின்றன. சகோதரங்களுக்குள் ஒற்றுமை இல்லை. புலம் பெயர் நாடுகளைப் பொறுத்தவரையில் சிலருடைய உறவுகள் தங்கள் பிள்ளைகளை தங்களுடைய உறவுகளின் கொண்டாட்டங்களுக்கு அழைத்துச் செல்வது குறைந்து வருகின்றது.

பெற்றோரைப் பெருமைப் படுத்தியது அந்தக்காலம். அம்மா, அப்பா என்றால் முன்னறி தெய்வங்கள்தான். கீறிய கோட்டைத் தாண்டாத பிள்ளைகள், சண்டைபிடித்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதர பாசத்தை விட்டுக் கொடுக்காத சகோதரங்கள் மருமக்களை தாம் பெற்றபிள்ளைகளாக மதிப்பளித்த காலம் மகிழ்வும் ஒற்றுமையும் நிறைந்திருந்தது. விட்டுப்பிரியாமல் இறப்புவரை இணைந்தே வாழ்ந்தார்கள்.
ஆனால் இங்கு உறவுகள் தூரத்து இடங்களில் வாழ்வதினால் உறவுகள் தொடர்புகள் குறைந்தே போகின்றன. அதைவிட வேலைப்பாடு, கணனி கடமையின் வேலை, வேகம், பணத்தின் பெறுமதி, ஆசை, கோபம் கொள்ளும் நடத்தையும் பந்த பாசங்களைப் பிரித்துள்ளது. ஆகவே இலட்சியப் பாதையில் பயணிக்கு, வாழ்வை வளமாக்க எம் இயல்புக்கு ஏற்ற அளவிலே தகுதிக்கு மேற்படாமல் பார்த்துக்கொள்ளும்போது வாழ்வு வளமாக அமையும். எனவே குடும்பத்தில் பொறுமையைக் காத்து வளமாய் வாழ வழிவகுப்போம்!...

---

# பறவைகளும் மனிதரின் உற்ற உறவுகள்

1-பறவைகள் மகரந்தச்சேர்க்கை செய்து தாவரங்கள் பெருகச் செய்கின்றன.
2-மனிதருக்குப் பயன்தரும் பயிரினங்களை அழிக்கும் பூச்சி, புழுக்களைப் பறவைகள் தின்றுவிடுவதால் பயிர்கள் காக்கப்படுகின்றன.
3-நிலத்தில் வாழும் பூச்சி புழுக்களை இப்பறவைகள் தின்றுவிடுவதால் நிலம் சுத்தமாகிப் பயிரினங்ள் செழித்து வளர்ந்து மனிதனுக்குப் பலன் கிட்டுகின்றது.
4-பறவைகள் விதைகள், பழங்களைத் தின்று எச்சம் போடுவதால் வறண்ட நிலங்களிலும் செடி, கொடி, மரங்கள் முளைத்து வளர்கின்றன.
5-இறந்த உயிரினங்களைச் சில பறவைகள் உண்டுவிடுவதால் இயற்கை தூய்மை செய்யப்படுகின்றது. தொற்றுநோய் வராமல் தடுக்கப்படுகின்றது.
6-சில பறவைகள் (கிளி, புறா, மைனா,, குருவி) மனிதரின் வைத்தியராகவும் விளங்குகின்றன. பறவைகளோடு நாம் தினமும் பேசிப்பாடிப் பழகுவதால் மனிதருக்கு ஏற்பட்ட மனஅழுத்தத்தைப் போக்கலாம். மன அழுத்தம் வராமலும் இந்தப் பறவை இனங்கள் நம்மையும் நாம் வாழும் சூழலையும் பாதுகாக்கின்றன.
ஆகவே நாம் பறவைகளை வளர்ப்பதைக் கையாள வேண்டும். இவை மட்டுமல்லாமல் பறவைகளுக்குத் தீங்கு செய்யாமல் அவற்றைக் காப்போம்!..முடிந்தால் வீடுகளில் பறவைகளை வளர்த்துப் பயன்பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானையை பற்றிய சிறப்பான தகவல்கள்...



யானை 22 மாதங்கள் கருவை சுமக்கும்.
யானை 4 வருடங்களுக்கு ஒரு முறைதான் குட்டி போடும்.
அதன் தும்பிக்கையால் 350 கிலோ எடையைத் தூக்க முடியும்.
சில நேரங்களில் இரண்டு குட்டிகள் கூடப் போடும்.
ஒரு யானை ஒரு காட்டையே உருவாக்கும்.
ஒரு நாளைக்கு 200 - 250 கிலோ உணவு சாப்பிடும்.
ஒரு நாளைக்கு 100 - 150 லிட்டர் தண்ணீர் குடிக்கும்.
250 கிலோ உணவில் 10% விதைகள் இருக்கும்.
சாணத்தில் இருந்து 10 கிலோ விதைகள் காட்டில் விதைக்கப்படும்.
யானை ஒரு நாளைக்கு 300 - 500 விதைகள் விதைக்கும்.
யானை ஒரு நாளில் 100 மரங்களை நடுகிறது.
ஒரு வருடத்திற்கு 36500 மரங்கள் நடுகிறது.
ஒரு யானை தன் வாழ்நாளில் 18 லட்சத்து 25 அயிரம் மரம் வளர காரணமாகிறது. இதனால்தான் யானை இருந்தாலும் ஆயிரம் பொன்...இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்களோ!..

அடுத்த முறை நீங்களும்,நானும் யானையை பார்க்கும் பொழுது நம் மனதில் தோன்றக் கூடிய ஒரே காட்சி நாம் பார்க்கும் இந்த காடுகள் மற்றும் இயற்கை வளம் இந்த ஜீவனால் உருவானது என்பதே.

யானையை பற்றிய இன்னும் பல சுவாரஸ்யமான தகவல்கள் உள்ளன. தூய தமிழில் யானைக்கு 60 பெயர்கள் உள்ளது. யானையின் இரண்டு தந்தங்களும் சம அளவில் இருக்காது. யானையின் துதிக்கை 40,000 தசைகளால் ஆனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் ஒரு லட்சம் யானைகள் இருக்க வேண்டும் என்று கணக்கிடப்பட்ட நிலையில் இப்போது இருப்பது 27312 யானைகள் மட்டுமே! யானைகள் தமக்குள் பேசிக் கொள்ளும் திறன் வாய்ந்தவை. நோயுற்ற யானைகளுக்கு உணவையும், நீரையும் மற்ற யானைகள் ஊட்டும். நோயுற்ற யானைக்கு மற்ற யானைகள் தடவிக் கொடுத்து ஆறுதல் படுத்தும். யானையின் பற்கள் சுமார் 5 கிலோ எடை கொண்டவை. 5 கிமீ தூரத்தில் தண்ணீர் இருந்தாலும் அதனை வாசனை மூலம் தெரிந்து கொள்ளும் திறன் கொண்டவை. யானை தன் தும்பிக்கையால் 7.5 லிட்டர் தண்ணீரை எடுத்து குடிக்கும் திறனுடையது. இந்தியாவில் உள்ள பெண் யானைகளுக்கு தந்தம் கிடையாது.

ஆப்ரிக்காவில் உள்ள பெண் யானைகளுக்கு தந்தம் உண்டு. பொதுவாக பெண் யானைகளுக்கு மதம் பிடிப்பது கிடையாது. கூட்டத்தில் இருக்கும் முதுமை அடைந்த யானை தான் இறப்பது உறுதி என்று தெரிந்தால் கூட்டத்தில் இருந்து பிரிந்து உண்ணா நோன்பு இருந்து தன் முடிவை தானே தேடிக் கொள்ளும்.

ஞானிகள் உண்ணா நோன்பு இருந்து சமாதி நிலை அடைவது போலவும் சில யானைகள் வாழ்ந்து முடியும். இயற்கையை சமநிலை படுத்துவதில் யானையின் பங்கு மிகப் பெரியது. அதை தெரிந்து தான் கேரள அரசு தனது அரசு முத்திரையில் இரண்டு யானைகளை வைத்துள்ளது. இயற்கையை சமநிலைபடுத்த இறைவனால் நமக்கு அனுப்பபட்ட ஒரு அருட்கொடையாக பாருங்கள். வாழ்க யானைகள் வளர்க மரங்களின் எண்ணிக்கை. நன்றி! நன்றி!

---

## இலங்கையில் யானைகள்.... கடந்த 5 வருடங்களில்....

| ஆண்டு - | மனிதர்களாலும் இயற்கையாகவும் இறந்த யானைகள் | - யானையால் கொல்லப்பட்ட மனிதர்கள் |
|---|---|---|
| -2015 | -205 | -63 |
| -2016 | -279 | -88 |
| -2017 | -256 | -87 |
| -2018 | -319 | -96 |
| -2019 | -402 | -114 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளுக்கு கோபம் வந்தால்? (கவி மீனா)

கடவுள் இருக்கின்றார் என்ற ஒரு நம்பிக்கைதான் என்னை இன்று வரை துணிவோடு வாழ வைக்கிறது, இன்றும் அந்த நம்பிக்கை என்னை கைவிடவில்லை சிலர் சொல்கிறார்கள் கடவுள் இருந்தால் இப்படி எல்லாம் அழிவு வருமா? உயிர்கள் சாகுமா? என்று கேள்வி எழுப்புகிறார்கள்,கடவுள் ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் பொறுமையாக இருக்கிறார் என்று நான் நம்புகிறேன்

இந்து சாஸ்திரங்களும், வரலாறுகளும், இலக்கியங்களிலும் கூறப்பட்டது போலே நாம் வாழும் இந்த பூமியிலே அக்கிரமம் தலை தூக்கும் போது இறைவன் அதர்மத்தை அளித்து தர்மத்தை நிலை நாட்ட அவதாரம் எடுபதாக சொல்ல படுகிறது. இன்றைய கால கட்டத்தில் நாடெங்கும் அதர்மமும், அனியாயங்களும், படு கொலைகளும், இயற்கை அழிவுகளும், இயற்கையை மாசு படுத்தலும், வனங்களை அழித்தலுமாக பல கொடுமைகள்தான் எங்கு திரும்பினாலும் காணகூடியதாக இருக்கின்றது.

இதை விட பூமியில் வாழும் மக்களிடையே பெரும் பான்மை மக்களிடம் அன்பு பாசம் என்பதை காணவே முடிவதில்லை, காமம், காசு இரண்டுக்கும்தான் முதலிடம் கொடுத்து வாழும் மக்களே அதிகம் பேரு! உண்மையான அன்பும், உதவி செய்யும் மனபான்மையும், அடுத்தவன் துயரம் கண்டு கருணை காட்டும் உள்ளமும் அறவே தொலைந்து போய்விட்டது.

உலக மக்களின் செயற்பாட்டாலே ஓசோன் படலமும் ஓட்டை விழுந்த நிலை கூட கேள்விப்பட்டோம். கடவுள் எமக்காக தந்த அருவிகள், கடல்கள் யாவற்றிலும் குப்பை கூழங்களை கொட்டி நீரை அசுத்தப்படுத்தியதும் இந்த பூமியில் வாழும் மக்கள்தானே? விண்ணில் பறக்கும் றொக்கெட், விமானம் முதல் தரையில் ஓடும் வாகனங்களின் புகை தொட்டு, எரிந்து புகைகளை கக்கும் பக்ரறிகள் வரை மனிதனின் செயற்பாடே! இவை யாவும் இயற்கையை மாசு படுத்துகிறது என்றால்,
மனிதன் சக மனிதனுக்கு செய்யும் கொடுமைகளும் துரோகங்களும் எல்லை மீறி கொண்டுதானே போகிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்திலை ஒற்றுமை இல்லை, நட்புகளுக்குள் துரோகங்களும், பொறாமை, போட்டிகளும், சண்டை சச்சரவுகளுமாக மனித நேயம் செத்துப்போன நிலையில் கடவுளுக்கும் கோபம் வந்ததோ தெரியவில்லை!

ஒருவனுக்கு ஒருத்தியென்று சொன்ன மத கோட்பாடுகள் இன்று அழிந்தன, மூலைக்கு மூலை விபச்சாரம் நடக்கிறது, குடும்பத்தில் இருந்து கொண்டே இன்னும் ஒரு கள்ளத்தொடர்பு வைப்பவரும், காம இச்சைக்காக பேயாக அலைபவரும், காசேதான் கடவுள் என்று காசையே தியானிப்பவருமாகச் சனம் மனமும், குணமும் மாறிப் போன நிலையை கண்ட பின்பும் கடவுள் இன்னும் பொறுத்து இருக்க முடியுமா?

அதனால்தான் ஒரு அச்சுறுத்தலை கொடுக்கவும், ஒழுக்க முறைகளை மீண்டும் உலகுக்குக் கொண்டு வரவும் என்றே இந்த கொரோனா கிருமியை கண்டும் காணாமல் கடவுள் விட்டாரோ என எண்ணத் தோணுகிறது. அன்று அர்சுனன் காடுகளை அழித்து பாம்புகளை கொண்டதாலே உண்டான சாபம் இன்று வரை மனிதர்களை பழிவாங்க பாம்புகள் துடிக்கின்றன, கிறிஸ்தவ மதத்திலே கடவுள் சாப்பிட வேணாம் என்று ஆதா ஏவாவிடம் சொன்ன பழத்தை சாப்பிட்டதாலே சாபம் கிடைத்ததாக சொல்கிறார்கள்

இப்படி ஒவ்வொரு பாவத்துக்கும் தண்டனையாக இந்த மனித குலம் காலத்துக்கு காலம் அழிந்து கொண்டே போகிறது இதற்கு காரணம் கடவுளுக்கு கோபம் வந்தால் என்ன நடக்கும் என்பதே இந்த எடுத்துகாட்டாகும். அதர்மத்தை அழிக்க தர்மத்தை நிலை நாட்ட கடவுள் பூமிக்கு வருகை தருவது எப்படியும் நடக்கும், நடந்து கொண்டே இருக்கும் பத்து அவதாரம் எடுத்த கடவுள் இம்முறை கொரோனாவாக அவதாரம் எடுத்துள்ளாரா?

ஆயுதம் இன்றி, குண்டு வெடிப்பின்றி, சத்தமின்றி, யுத்தமின்றி நான்காம் போரை நடத்துகிறாரா? கடவுளுக்குத்தான் இது தெரியும். எதற்கும் கடவுளை நம்பினோர் கை விடப்படார் என்பது உண்மை! அதுவும் நேர்மை, நியாயம், அன்பு, பாசம் உள்ளவர்களுக்கு துன்பம் வராது, கடவுளின் உதவிக்கரம் என்றும் எமக்காக உள்ளது. சுத்தம் சுகம் தரும், மன தூய்மை மன அமைதி தரும்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பரம்பரை...

தமிழர் வாழ்வியலில் ஏழு பரம்பரை இருக்கின்றது என்று கூறுவார்கள். அந்தத்தலைமுறைகளைப் பார்ப்போம்...

1-நாம் (நான்)
2-தந்தை - தாய் (அம்மா-அப்பா)
3-பாட்டன் - பூட்டி
4-பூட்டன் - பூட்டி
5-ஓட்டன் - ஓட்டி
6-சேயோன் - சேயோள்
7-பரன் - பரை

நீங்கள் உங்களுடைய...

அம்மா + அப்பாவுக்கு = மகன் + மகள்
பாட்டன் + பாட்டிக்கு = பேரன் + பேத்தி
பூட்டன் + பூட்டிக்கு = கொள்ளுப்பேரன் + கொள்ளுப்பேத்தி
ஓட்டன் + ஓட்டிக்கு = எள்ளுப்பேரன் + எள்ளுப்பேத்தி

வேறு எந்த மொழிகளிலும் இப்படியான உறவுமுறை இல்லையாம். இது மதிழக்குச் சிறப்புத்தான்....

---

# 25 வருடங்கள்....

யூகோஸ்லாவியா நாடு முன்னர் ஒரு நாடாக இருந்தது. 1995ம் ஆண்டு 7 நாடுகளாகப் பிரிந்து இந்த வருடம் 25 வருடங்களாகும்... அந்த நாடுகளின் பெயர்களைப் பார்ப்போம்....

1. Croatia
2. Bosnia and Herzegovina
3. Serbia
4. Montenegro
5. Kosovo
6. Macedonia
7. Albania



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 11

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 2 | 8 | 3 | 1 | 7 | 9 | 6 |
| 1 | 9 | 8 | 6 | 7 | 4 | 3 | 5 | 2 |
| 6 | 3 | 7 | 5 | 2 | 9 | 8 | 4 | 1 |
| 7 | 1 | 4 | 3 | 9 | 6 | 5 | 2 | 8 |
| 2 | 5 | 3 | 4 | 8 | 7 | 6 | 1 | 9 |
| 8 | 6 | 9 | 1 | 5 | 2 | 4 | 3 | 7 |
| 4 | 2 | 5 | 7 | 1 | 8 | 9 | 6 | 3 |
| 9 | 8 | 6 | 2 | 4 | 3 | 1 | 7 | 5 |
| 3 | 7 | 1 | 9 | 6 | 5 | 2 | 8 | 4 |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-102

| | | | |
|---|---|---|---|
| க | ல் | வி | க |
| ண் | ட | சா | ட் |
| ணா | க | ஆ | டு |
| டி | ர | க | ரை |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 165

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜ | னா | தி | ப | தி | த் | க |
| ன | ல் | ன | பு | த் | த | ர் |
| வ | ட் | ட | ம் | பு | லி | ணா |
| ரி | க | ந | பூ | ட் | ட | ன் |
| தி | ட | ன் | மா | ல் | ட | க |
| த் | க | வ | லை | ப | சி | ட |
| பு | ம் | தே | ர் | த | ல் | பா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்தான்......மதவடி மயிலன்.....



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா கிருமி மீண்டும் வந்து தன்ர கைவரிசையைக்காட்டி லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கி வருவதை எண்ணி என்னைப் போல நீங்களும் ஆறாத்துயரில்தான் இருப்பீர்கள் என்றுதான் இந்த மயிலன் எண்ணுகிறான். முதற்கண் அனைத்து உயிர்களுக்கும் அஞ்சலி..

எத்தனை நாளைக்கு இதற்குப் பயந்து வீட்டில ஒளித்துக் கிறக்கிறது. ஒரு மாதம், இரண்டுமாதம் என சனங்கள் பொறுத்துப்பார்த்ததுகள்..எட்டு மாதமும் எப்படி ஓடியதென்றே தெரியவில்லை. எது வந்தாலும் வரட்டும் எனச் சனங்கள் வெளிக்கிட்ட படியாலதான் மீண்டும் இந்தக் கொரோனா அலைவந்து சனங்களை ஆட்டிப்படைக்குது பாருங்கோ.

இது மட்டுமல்லாமல் வருடாவருடம் ஊர் சுற்றுப் புறப்படும் பல்லாயிரக் கணக்கானவர்களும் பொறுத்துப்பார்த்து இறுதியில் வேறநாடுகளுக்குப் போய்ச் சுற்றிப்போட்டு வந்தபடியால் கொரோன கூடிவிட்டதாகவும் கதை. உண்மையும் தான் பாருங்கோ. கண்ணுக்குத் தெரியாத கடவுளைப்போல இதுவும் எங்க? எப்படி? யாரால் தொற்றும் என்று யாருக்கும் தெரியாது. உந்த வல்லரசு நாடான அமெரிக்காவே இதைக் கட்டுப்படுத்த முடியாமல் சரிந்து விழுந்து கிடக்கிறது. இந்தியா, பிறேசில், மெக்ஸிக்கோ போன்ற நாடுகளில் தினமும் ஆயிரக்கணக்கானோர் மண்ணோடு மண்ணாகிவருகின்றனர்.

ஐரோப்பா நாடுகள் கட்டுப்படுத்த முடியாமல் அல்லோலம். ஏனைய பலநாடுகள் வறுமையும் நோயும் தலைவிரித்தாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த கிருமித்தாக்குதலைச் சமாளிக்கமுடியாமல் திண்டாடுகின்றன. இப்படிப் பாருங்கோ உலகம் முழுவதும் ஏதோ ஒருவகையில் கண்ணுக்குத்தெரியாத இந்தக் கிருமி மனிதரை விடாமல் துரத்திக்கொண்டே இருக்கின்றன. யாரிடம் மறையிடுவது?..யாரிடம் பரிகாரம் தேடுவது என்பதே இன்று உலகில் பூதாகரமாக எழுந்து நிற்கும் கேள்வியாகும்.

இது பாருங்கோ தொடர்கதையாகிவிட்டது. மக்களும் கிருமியோட வாழப் பழகிவிட்டார்கள். நடப்பது நடக்கட்டும் என்று வெளியே கண்டபடியும் அலைகிறார்கள். ஆனால் இதனால் பாதிக்கப்படுவதையும் ஒருவராலும் நிறுத்த முடியாது எங்களை நாங்கள்தான் பாதுகாக்க வேண்டும். இல்லையேல் அழிவுதான் மிஞ்சும பாருங்கோ.. இது இப்படி இருக்க இந்த ஆடி, ஆவணி மாதங்கள் கொரோனா தொற்றோடு உலகக் காலநிலையும் வெப்பம் அதிகரிப்பால் எல்லா நாடுகளிலும் மக்கள் பட்ட துன்பங்களும் அதிகம்தான். வீடுகளிலும் இருக்க முடியாது வெளியிலேயும் போகமுடியாது என மக்களுக்குத் தொடராகத் துன்பம்தான் தேடிவருகிறது பாருங்கோ...

இதிலிருந்து புலம்பெயர் வாழ் தமிழர்களும் தப்ப முடியாதுதானே. எல்லாருமே அடங்கிக் கிடந்தாலும் ஆங்காங்கே கோவில், திருமணம் என நடக்கிறதுதானே. இதைவிட வீட்டோடு பத்துப் பதினைந்து பேருடன் கொண்டாட்டம் முடிகின்றது. இதுவும் ஒரு வழிக்கு நல்லதுதான் பாருங்கோ. இல்லை என்றால் கோடி..கோடியாக பணத்தை அள்ளிக்கொட்டிப் பக்திப்பரவசம் ஆடுவோர் ஒருபக்கம், பணத்தால பந்தா காட்டுபவர்கள் ஒருபக்கம், பெயர், புகழ் அந்தஸ்த்து, பூமாலை, பொன்னாடை, பட்டாடை என அலையும் கூட்டங்கள் என எத்தனை எடுப்புக்கள். இவை எல்லாத்தையும் பொறுக்காத இந்தப் பூமிக்கு இப்படியான பல வகைக் கொரானாக்கள் அடிக்கடி வரவேண்டும் என்று தான் சாமியைக் கும்பிட்டதாக எனது நண்பன் ஒருவன் சொல்லிப் பெருமூச்சுவிட்டான் பாருங்கோ.

இந்தக் கொரோனா அலை, கடும்வெப்ப அலை, அத்தோடு நம்மட தாய்நாட்டில் தேர்தல் அலையும் வந்ததே..வந்ததுதான் பலருக்குக் கொண்டாட்டம் சிலருக்குத் திண்டாட்டம். கொரோனா அலையும் அரசாங்க வெற்றிக்குத் துணையாக இருந்தபடியால் மக்கள் வாக்குகளை அள்ளிப்போட்டு அரசேற வைத்திருக்கிறார்கள். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நெருக்கடிகள் எதிர்காலத்தில் உண்டு என்பது உண்மை. கொரோனா தடுப்பு, பொருளாதார நெருக்கடி, போதைப்பொருள் நெருக்கடி, அரசியல் நெருக்கடி எனத் தொடரப் போகின்றது என்பது உண்மை பாருங்கோ. மகிந்த குடும்பத்தவர்கள் வல்லவர்கள் எல்லாத்தையும் சமாளிப்பார்கள் என்று மக்கள் எதிர்பார்த்துத்தான் வாக்குகளை அள்ளிக் குவித்தவர்கள். சரி பொறுத்திருந்து பார்ப்போம். என்றால்....

தமிழர்களின் அரசியல் நெருக்கடி தலைக்குமேல வெள்ளம் வந்த கதியாகிப் போட்டுது. சுமந்திரனையும் சிறீதரனையும் விலாசமில்லாமல் முடித்துவிடவேண்டுமென்று ஒரு பகுதியினரும் ஏன் தாயக, புலம்பெயர் ஊடகங்களும் இரவு பகலாக பிரசாரம் செய்தும், கணிப்புகள், ஆய்வுகள், விமர்சனங்கள் செய்தும் அனைத்தும் பொய்த்துப்போய் தமிழ் மக்கள் தமது அதிகப்படியான வாக்குகளால் வெற்றிபெறச் செய்திருக்கிறார்கள் என்றால் களநிலவரங்கள் வேறமாதிரி இருக்கிறது. மக்கள்நிலைப்பாடு வேறமாதிரி. மக்கள் விழிப்பாக இருக்கிறார்கள் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

இன்றையநிலை...ஆளுக்கொரு கட்சி, ஆளுக்கொரு தலைவர். மக்கள் கூறுபட்டுக் கிடக்கிறார்கள். இப்படி ஒன்றுபடாமல் ஒவ்வொருவரும் பாராளுமன்றம் போய் என்ன செய்யப்போகிறார்கள். எல்லாரும் ஒற்றுமை...ஒற்றுமை என வாய்கிளியக்கத்துகிறார்கள். அறிக்கைவிடுகிறார்கள். ஒன்றுமே நடப்பதில்லை. தில்லுமுல்லுகள், ஆளையாள் குழிபறிப்பு, செல்வாக்கு, பணம், புகழ், அதிகாரப் போட்டிகள் பொறாமை, ஆதிக்கம், சாதிய சமூக முரண்பாடுகள் என இவர்கள் முன் பரந்து விரிந்து கிடக்கும் செயற்பாடுகளுக்கு இவர்கள் முதல் தீர்வு காணமுடியாவிடின் நிட்சயம் இவர்கள் அடுத்தகாலடி வைத்து நகரமுடியாது என்று இந்த மயிலன் நம்புகிறான்.

எந்தக் காரியத்தையும் நாம் நல்லபடி செய்து வெற்றிபெறவேண்டுமானால் ஒற்றுமை என்பது அவசியமானதே. இதை நாம் கடந்த கால நிகழ்வுகளிலிருந்து படித்த அனுபவங்களாகும். ஆகவே விட்டுக்கொடுப்புகள், அதிகாரப் போட்டிகளைத் தவிர்த்து உரிமைகளுக்கும் முன்னேற்றத்திற்கும் இந்த அரசியல் வாதிகள் பாடுபட வேண்டும். தவறும் பட்சத்தில் மேலும் பல நெருக்கடிகள் தமிழ் மக்களைச்சூழ்ந்து கொள்ளும் என்பது உண்மை என்றதை இந்த மயிலன் உரிமையோடு சொல்லி மீண்டும் சந்திப்போம்..அப்பவாறன்!...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கடிதங்கள்...

இனிதான வணக்கம்!.
தாயக புனர்வாழ்வுக்காக மண் சஞ்சிகையூடாக நிதி உதவி புரிந்துவரும் சேவை உள்ளம் யேர்மனியரான திரு ஜோகன்னாஸ் குறுன்ட்லர் வாழியவே....
தார்மீகப்பணி தராளமனது. தக்க சமயத்தில் உதவும் அகம் தன்னம்பிக்கை வளர்த்திட உதவும் திடம். தற்பெருமை செலவுகளைக் குறைத்து தன்போல் பிறரை நேசித்திடக் கற்றுக்கொடுக்கும் குடும்பத்தினர் வழிகாட்டல் ஒன்றித்து மிளிர செய்பணியில் சிறந்து விளங்கும் இளையவர் பிறமொழி எனினும் பிரியத்தின் நேசம் கைமாறு கருதாத பணிக்கும் வழிகாட்டி உதவும் பற்றிர்க்கும் மனம் நிறைந்த பாராட்டுக்கள். வாழ்த்துக்கள் நெறிப்படுத்தலுக்கு ஏற்றவழிசமைத்து நேர்முறையில் பணிதொடரும் மண்ணிதழின் மகத்துவப்பணிக்கும் நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள். தொடர்க பணி தொன்மையும் மண்ணையும் நேசிக்கும் வழி! நன்றி!.

வசந்தா ஜெகதீசன்-யேர்மனி

மண் சஞ்சிகையினரின் பணிக்கு நன்றிகள்...

மண்சஞ்சிகையானது 30 வருடங்கள் தாண்டி தமிழ், கல்வி, கலை, இலக்கிய, எழுத்துப் பணிகளோடு தார்மீக உதவிகளைத் தாயக மக்களுக்குச் செய்துவரும் சேவையை மனதாரப் பாராட்டுகிறேன். உலகிலுள்ள பல தமிழ் ஊடகங்கள் வியாபார நோக்கில் இயங்கிவருகையில் இச்சஞ்சிகையானது மாறுபட்டு தமிழ்ப்பணிகளுடன் மனிதநேயப் பணிகளையும் சிறப்பாகச் செய்துவருவதை வாழ்த்துகிறேன். போற்றுகிறேன்.

இச்சஞ்சிகையைப் பின்பற்றி எழுத்தாளர்கள் படைப்பாளிகள் வாசகர்கள் தம்மாலான உதவிகளைப்புரிந்து இச்சஞ்சிகையை மேலும் வளர்த்தெடுப்போம். வெறும் வெட்டிப்பேச்சுக்கள், பிரசங்கங்களை விட்டு, பேச்சு,எழுத்து மட்டுமல்லாது உண்மையாகச் செயற்படுவதுதான் நல்லது. கணனி சமூக ஊடகங்களில் படங்களையும் பொன்மொழிகளையும் போட்டுப் புகழ்தேடும் வித்துவ சிரோன்மணிகளே. தாயகச் சிறார்களுக்காவது சிறிது உதவுவீர்களாயின் அதுவே நல்ல காரியமாக அமையும். என எண்ணுகிறேன்!. நன்றியுடன்...

கோபால் நந்தன்
சுவீஸ்லாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனதுபார்வையில்...கொரோனா!...

-கெங்கா ஸ்ரான்லி-

கொரோனாவின் தொல்லை ஒருபுறமிருக்க மனிதரின் தொல்லை இன்னொருபுறம். மக்களின் மனதில் பீதி அல்லோல கல்லோலம். அதற்கிடையில் கடவுளைப்பற்றி ஆய்வாம். கடவுளேசித்தராம். சிவனும் இல்லையாம். இதென்ன புதுகுழப்பம். ஆண்டாண்டு வணங்கும் எம்கடவுளை அவமதிக் கிறார்களே! அப்படியானால் எம் முன்னோர்கள் வகுத்தது என்ன? எதற்காக. விஷ்ணு, பிரம்மா என வகுத்து வணங்கினர். படைத்தல், காத்தல்,அழித்தல் இவை உண்மையில்லையா?

கட்டப்பட்ட திருத்தலங்கள் ஏன்? ஒவ்வொருத்தர் ஒவ்வொன்றை எழுதுவர். அதை எல்லாம் சரி என எடுத்துக்கொள்ளமுடியாது. சிவனின் கதைகளிலேகூட சிவன் ஒரு பெண்ணின் அழகைக்கண்டார் அவளை அடைய மனித உருவில் சென்றார். அதனால் அப்பெண் சாபத்திற்குள்ளானாள் என்பது கதை. அதில் எவ்வளவு நிஜம் இருக்கும்.

எல்லோருக்கும் படி அளக்கும் தெய்வம் இப்படி நடப்பாரா? இன்னொரு கதை சிவன் ஒரு இடத்தில் பெண்களைத் துன்புறுத்த அவர்கள் அவருடைய ஆணுறுப்பை அறுக்க அது விழும்போது பார்வதி வந்து ஏந்தினாவாம். அதுதான் சிவலிங்கம் என்று வணங்குகின்றோம் என்பது கதை.

இது வந்து மக்களைக் குழப்புவதற்காக. இவையெல்லாம் யாரால் எழுதப்பட்டவை. கேட்கும்போது வலியாக இருக்கிறது. கடவுள் என்ற நினைவுடன் எதையும் பார்த்தால். நினைத்தால் அங்கு வித்தியாசம் தெரியாது. ஆனால் வித்தியாசமாகப்பார்த்தால் அது வித்தியாசமாகத்தான்படும்.

கந்தஷஷ்டி கவசத்திற்கு வித்தியாசமான கருத்து கூறுகிறார்கள். கேட்கவே அவமானமாக இருக்கிறது. இவ்வளவு காலமும் கந்தஷஷ்டி கவசம்படித்து எவ்வளவு மக்கள் பயன்பெற்றுள்ளனர். முருகனையே பழித்தால் முருகன் சும்மா விடுவாரா? அதற்கும் ஒருபதில் வரும். நாம்தான் மேதாவிகள் அதீத புத்திஜீவிகள் என பிதற்றக்கூடாது. கடவுள் இருகிறார் அதனால் இந்தப் பிரபஞ்சம் இயங்குகிறது. அதை உணர்ந்து கொள்ளவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில். விஞ்ஞானம் என்றீர்களே. கொரொனாவுக்கு மாற்று கண்டுபிடித்திர்களா? அதை ஒளிக்க முடிந்ததா?.. இல்லையே. ஏன் சற்று யோசித்துபாருங்கள்.

ஏதோ ஒரு சக்தி இருந்து இயக்குகின்றது. அதை உணரவேண்டும். மக்கள் அதற்காக எமது முன்னோர் விட்டுச் சென்ற எச்சங்கள் அல்ல. மரபுகள் எனவேதான் அவற்றை நாம் கடைபிடித்தோம். கடவுளைப் பிடிக்காதவர்கள் அதைவிட்டுப் பேசாமல் இருக்கலாம். அதைவிடுத்து தேவையில்லாத கருத்து விமர்சனம் தேவையில்லை. அன்றுவந்த ஆரியர் கடவுள் வழிபாட்டைக் குழப்பினர். ஆனால் கடவுள் கடவுள்தானே.

ஆகவே எமது வழியில் நாம் வணங்குவோமே. எதற்கு விதண்டாவாதம். என்ன காணப்போகின்றீர்கள். எங்கே இப்படிக் கதைப்பவர்கள் கொரோனாவுக்கு ஒரு தீர்வு சொல்லுங்கள் பார்க்கலாம். ஆராய்ச்சி செய்யுங்கள். வேண்டாமென்று சொல்லவில்லை அதில் இருக்கும் நல்ல கருத்துகளைச் சொல்லுங்கள். அல்லது நல்ல செய்முறைகளைக் காட்டுங்கள். ஆனால் கடவுளை விமர்ச்சிக்காதீர்கள். கேள்விப்பட்டதில் எனது மனதில் தோன்றியது....

## தகவல்:-

அமெரிக்க ஆராய்ச்சியாளர் ஆர்தர் போலெட்டின் அறிக்கையின்படி ஒரு சாதாரண அமெரிக்கர் தனது 72 வயது வரையிலான ஆயுளுக்கு வாழ்ந்தார் எனில்....

ஆகக்குறைந்தது 11 மாடுகள் 3 ஆடுகள் 23 பன்றிகள் 45 வாத்துகள் 1.100 கோழிகள் 862 கிலோ மீன் இனங்களை உண்கிறார்.

இதைவிட அமெரிக்காவில் ஒரு மணித்தியாலத்தில் 6.60.000 விலங்கினங்கள் இறைச்சிக்காகக் கொல்லப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(நன்றி "அகரம்" சஞ்சிகை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் பாவனை பற்றிய விளிப்புணர்வு

(கலைவாணி ஏகானந்தராசா)

போதை ஒளிப்பு செய்யவேண்டுமானால் போதைப்பொருள் பாவிப்பதனால் ஏற்படும் தீன்மைகள் பற்றி பொதுமக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.போதை என்றால் என்ன? இதனால் ஏற்படும் விபரீதங்கள் எவை? என்பதை அறியாமலே "இதையும்தான் அனுபவித்துப் பார்ப்போமே" என்ற ஆவலுடனும் ஆசையின் தூண்டுதலாலும் பலர் தம் வாழ்வின் அழிவுக்கு காரணமாகிவிடுகின்றனர்.

போதை என்பது சிலமணி நேர இன்பத்தைக் கொடுக்கிறது. அதுமட்டுமின்றி மீண்டும் மீண்டும் அதனைப் பாவிக்கத் தூண்டும். போதைப்பொருள் பாவிப்பவர்களுக்கு மட்டுமே அதனால் ஏற்படும் உபாதை, வேதனை தெரியும். உள்ளத்துக்கு சிறிதுநேர மாயையைக் கொடுத்து, பின்னர் உடல் உபாதையை ஏற்படுத்தும். இந்த உபாதையை தாங்கமுடியாமலே மீண்டும் மீண்டும் போதையை உட்கொள்கின்றனர். உயிரற்ற உடல்போல் உணர்வு அற்றவராய் ஆக்கிவிடும். உள, உடல் பாதிப்புக்களை ஏற்படுத்தும். இதனால் சமூகத்தில் தவறான காரியங்களில் ஈடுபடவைக்கும்.

மாசடைந்த சிந்தனைகளால் மாற்றமடையும் வாழ்வு கொலை, கொள்ளை, களவு, பாலியல் போன்ற தீய செயல்களை செய்யத் தூண்டுகிறது. போதைக்கு அடிமை யாவதால் பொருளா தாரத்தை இழந்து குடும்பம் உற்றார் உறவுகளையும் கடனாளிகளாக்கி, பணத்துக்காக சமூகவிரோத செயல்களில் ஈடுபடு கின்றனர். இதனால் தன்மானம் இழந்து உறவுகளை இழந்து தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

சிலர் முற்கோபத்தினாலும் அறியாமையினாலும் போதைப் பொருள்களுக்கு அடிமை யாகின்றனர். இதிலிருந்து வெளியேற முடியாமல் தவிக் கின்றனர். சில முயற்சியற்ற முட்டாள்கள் தம் வாழ்வை மேம்படுத்த முடியாததால் போதைக்கு அடிமையாகித் தம் வாழ்வை அழிப்பதுடன் தன்னை சுற்றியுள்ள உறவுகள், நண்பர்கள் தம் குடும்பம் உட்பட சமூகத்தையே நாசமாக்கிவிடுகின்றனர்.

பாடசாலை மாணவர்களோ மேதைகளாக வேண்டியவர்கள் போதைக்கு அடிமையாகி சீரழிந்து போகின்றனர். நாளைய சிற்பிகள் நாதியற்றுப் போகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோராகிய நாம் தான் அவர்களின் நட்புக்களையும் பாடசாலை தவிர்ந்த மேலதிக நேரங்களையும் பிள்ளையின் பொழுதுபோக்குகளையும் மிக கவனமாக அவதானிக்க வேண்டும். அன்பாகப் பேசி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து தீர்த்து வைக்க வேண்டும். திடகாத்திரமாக ஆரோக்கியமாக ஆளுமை யுள்ளவர்களாக வளர போதைப் பொருள் பாவிப்பின் விளைவுபற்றிய போதிய விளக்கத்தை கொடுக்க வேண்டும். என் பிள்ளைக்கு இதுபற்றி தெரியாது என்ற உங்கள் தவறான அபிப்பிராயமே பிள்ளைக்கு சாதகமாக அமைந்து விடுகிறது.

போதைப்பொருள் பாவனைக்கான காரணிகள் என்று பார்த்தால் :-

1.வீட்டுச்சூழல்
2.சமூகச் சூழல்
3.குடும்பச்சூழல்
4.ஏற்றத்தாழ்வு, போட்டிகள்
5.பொழுதுபோக்கு மீடியாக்கள்

வீட்டுச்சூழலில் தந்தையோ அல்லது உறவினரோ வீட்டிலே பாவிப்பதும், விழாக்களிலோ விருந்துபசாரங்களிலோ போதைப் பொருள் உபயோகிப்பதை அவதானிக்கும் பிள்ளைகள் இது தவறான செயலில்லை என்று நினைப்பதாலும் சமூகத்தில் இது அந்தஸ்து தரும் என்று நினைப்பதாலுமே பிள்ளைகள் பயன்படுத்த ஆரம்பிக்கின்றனர்.

சமூகசூழலில் அதாவது போதைப்பொருள் பாவிக்கும் சக தோழர்களின் சேர்க்கையாலும், கட்டுப்பாடற்ற விற்பனையாலும் இப் பழக்கத்துக்கு ஆளாகி விடுகின்றனர். சமூகத்தில் தன்னை ஒருவனாக முன்னிறுத்த பணக்காரப் பிள்ளைகள் செய்யும் ஒரு தவறான செயலை நண்பர்களும் பழகிக்கொள்ள நேரிடுகிறது. கவலையை மறக்கவும், வேலைக்களைப்பை போக்கவும் மதுவை உபயோகிக்கும்படி சமுதாயத்தில் சிலர் கொடுக்கும் தவறான போதனைகளும் போதைப் பழக்கத்துக்கு காரணிகளாகும்.

குடும்பத்தில் பெற்றோரின் அன்பு அரவணைப்பு கிடைக்காத போதும் மனம் விரக்தியாகி கவலை ஏற்படும் போதும் அவற்றுக்கு தீர்வு காணபோதையை நாடுகின்றனர். இதே போன்று பெற்றோர் தமக்குள் தினமும் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதாலும், பிரிந்து வாழ் வதாலும் மன விரக்தியில் போதையை நாடுகின்றனர்.

சமூகத்தில் ஏற்றத் தாழ்வுகளை சந்திக்கும் போதும், வாழ்க்கையில் ஏற்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படும் சவால்களைச் சந்திக்க முடியாமலும், தோல்வி மனப்பான்மை இல்லாதவர்கள் போட்டிகளில் தோல்வியை சந்திக்க முடியாமலும், இதே போன்று காதல் தோல்வி, வாழ்க்கையில் தோல்வி என்று பலர் போதையை நாடுகின்றனர்.

பொழுதுபோக்கு மீடியாக்களில் காதல் தோல்வி,வாழ்வில் விரக்தி, நண்பர்கள் பிரிவு, வேலையின்மை போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காணப் போதையை நாடுபவர்களைப் படம்பிடித்துக் காட்டுவதுடன் தலைப்பு செய்திகளாய் வெளியிடுவதும் போதைப்பொருள் பாவனைக்கு இழுத்துச்செல்கின்றன.

போதையை ஒழிக்க வேண்டுமாயின் ஒவ்வொரு பெற்றோரிடையேயும் விழிப் புணர்வை ஏற்படுத்த வேண்டும். பெற்றோர் தம் பிள்ளைகளை அன்புடன் அரவணைத்து பெற்றோரையும் உற்றோரையும் கற்றோரையும் மதித்து நடக்கப் பழக்குவதுடன் ஆன்மீகத்திலும் பற்றை ஏற்படுத்தல் வேண்டும். உலகத்தில் வாழக்கிடைத்த இப்பிறவியின் மகத்துவத்தைப் புரிந்துகொள்ளும்படி வளர்க்க வேண்டும்!...

---

**கணக்குப்புதிர் விடை....**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | – | 5 | + | 7 | =7 |
| – | | – | | – | |
| 3 | + | 1 | + | 5 | =9 |
| + | | – | | + | |
| 1 | + | 1 | + | 1 | =3 |
| =3 | | =3 | | =3 | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி பாரதியாரும் இசையும்......

(கலைவாணி. ஏகானந்தராஜா)

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா -அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா - இந்த
கிறுக்கின் உளறுமொழி பொறுப்பாயடா

கவிமணி தேசிவினாயகம்பிள்ளையவர்கள் பாரதியின் கவிகளில் எவ்வளவு தூரம் தன் உள்ளத்தைப் பறிகொடுத்தவர். பாரதிமீது எத்தனை மதிப்பு வைத்திருந்தார் என்பதை இப்பாடல் வரிகள் மூலம் உணரமுடிகிறது. இசை என்றால் என்ன? ராகம் தாளம் பண் ஓசை சந்தம் சுருதி லயம் என்பவையுடன் இசைந்திருப்பதே இசை. இசையை மேலும் மெருகுபடுத்துவது கவிதை வரிகளும் பாடல்களுமே. சந்தத்துடன் கூடிய வரிகள் இசையுடன் இணையும்போது மனிதன் இயைந்து வசப்படுகிறான்.

இத்தகைய இசைக்கு பாரதியாரின் பங்கு அளப்பரியதாகும். சிந்துக்கவி சந்தக்கவி நாட்டுப்பாடல் தோத்திரப்பாடல் வேதப்பாடல் இலக்கியப்பாடல் தேசியபாடல்கள் என பலவகை பாடல்களை எழுதித்தந்துள்ளார். இவரது வரிகள் இசையோடு இணையும்போது மக்கள் மனதை தூய்மையாக்கி இன்பம் சுகம் மகிழ்ச்சியை கொடுக்கிறது. கவி வரிகளால் மக்களை ஒன்றுபடுத்தியவர் பாரதி. அது மட்டுமின்றி தேச உணர்வையும் உலக ஒற்றுமையையும் ஏற்படுத்த துடித்தார். தன் படைப்புகள் வாயிலாக இசைப்பயணத்தைத் தொடர்ந்தார். பெரியபெரிய கவிஞர்கள் பலர் இருந்தார்கள். ஆனால் பாடலாக பாடுவதற்குரிய முறையில் வரிகளை எழுதி அதற்கேற்ற இசையுடன் தாள லயத்துடன் பொருத்தி சுவையுடன் பாடும் வகையில் பாடல் வரிகளைத் தந்தவர் மகாகவி பாரதியே.

இசைக்கு மொழி ஒன்றும் தடையில்லை என்று கூறிய பாரதிக்கு தெலுங்கு ஆங்கிலம் வங்காளம் இந்தி சமஸ்கிருதம் போன்ற பல மொழிகள் தெரிந்திருந்தாலும் தமிழ் மொழிமீது மிகுந்த காதல் கொண்டிருந்தார். ஆயினும் மொழிபேதம் பார்ப்பதில்லை. அதனால்தான் அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் நாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து
தோணிகள் ஓட்டி விளையாடி வருவோம்"

என்ற புகழ் பெற்ற பாடல் மூலம் தமிழர்களாகிய நாம் தென் தேசத்து சேரநாட்டுப் பெண்களுடன் சங்கீதத்துக்கு அழகு தரும் தமிழ் மொழியால் பாடி மகிழ்வோம். இசைமூலம் ஒன்றுபடுவோம் எனும் கருத்தை விளக்கி பாடிமகிழ்ந்தார்.

"பண்ணுக்கே ஓர் பழதுண்டாயின் மண்ணே" என்றார் பாரதி. தமது பாடல்களுக்கு ராகம், தாளம் அமைத்து இசையின்பம் தந்தவரல்லவா? அவரது பாடல் வரிகள் ஒவ்வொன்றும் தாளநடையில் தான் அமைந்திருக்கும் . ரிதம் இல்லாத பாரதி பாடலே இல்லை எனலாம்.

"கலையின்பமே நிலையின்பமாம் கவியின்பமே அமிழ்தின்பமாம்." என்கிற அவர் பாடல் வரிகளிலும் "பண்ணு சுதி நீ எனக்கு பாட்டினிமை நானுனக்கு" என்கிற வரிகளிலும் இசையிலே ஆழ்ந்து போன பாரதியைக் காணலாம்.

இயற்கையாகவே பாரதிக்கு இசைஞானம் இருந்தது. தியாகராஜ கீர்த்தனைகளான "நகுமோமு கனலே" நிதிசால சுகமா போன்ற கீர்த்தனைகள்மீது மோகம் கொண்டிருந்தாராம். தியாகராஜ கீர்தனைகளின் பாவத்தையும் நயத்தையும் ரசித்துக் கேட்பாராம். தியாகராஜர் அந்தந்த பாடலின் கருத்துக்கேற்ப பாவம் வெளிப்படும் வகையில் ராகங்களை கையாண்டிருப்பதை பாரதியார் பாராட்டி எழுதியுள்ளார்.

பாரதி சில பாடல்களுக்குப் புதியவகையில் அமைத்த மெட்டுக்கள் அசாதாரணமானவை. "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்" என்ற பாடலை கமாஸ் ராகத்தில் தானே இசையமைத்துப் பாடியுள்ளார். "வெள்ளிப்பனி மலையின் மீதுலாவுவோம்" என்ற பாடலை புன்னாகவராளி ராகத்திலும் "தாயின் மணிக்கொடி பாரீர்" என்ற பாடலை ஆனந்தக்களிப்பு மெட்டிலும் பாடியுள்ளார்.

நொண்டிச்சிந்து காவடிச்சிந்து போன்ற எளிதான சிந்துவகைகள் கூட புதிய தோற்றம் கொண்டு ஒளி வீசுவதை ஒரு சிலரால் மட்டுமே அறிய முடியும். கண்ணபிரானை பல வடிவங்களில் ரசித்த பாரதிஇ கண்ணன் பாடல்கள் பலவற்றை வெவ்வேறு இசையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடக்கூடிய வகையில் இயற்றியுள்ளார். அதே போல் சக்தி மீதும் கண்ணம்மா மீதும் பல வடிவங்களில் உருவகப் படுத்தி பாவம் வெளிப்படும் வகையில் இசை அமைத்து பாடி வைத்துள்ளார்.

பாரதியார் மனிதரால் பாடப்பட்ட வாசிக்கப்பட்ட இசையை மட்டுமின்றி கானப்பறவைகளின் ஓசையையும் மிருகங்கள் பிராணிகளின் ஓசையையும் ரசித்துள்ளார். காற்றினிடை சுருதியிலும் மரங்களின் சலசலப்பிலும் மனதைப் பறி கொடுத்தவர். இவை மட்டுமின்றி இசைக்கருவிகளின் இசையையும் சுவைத்து மகிழ்ந்த பாரதி அதில் தனக்கிருந்த ஈடுபாட்டைத் தம் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். "வீணையடி நீயெனக்கு மேவும் விரல் நானுனக்கு" என்று வீணையை தம் காதலி கண்ணம்மாவாக உருவகித்தும் நல்லதோர் வீணை செய்தே என தம்மையே உருவகப்படுத்தியும் பாடியுள்ளார்.

பாரதி தமிழ் மீது கொண்ட பற்றினாலும் இசை மீது கொண்ட காதலாலுமே மக்கள் மனதில் பதியும்வண்ணம் பல்லாயிரம் பாடல்களை தந்துள்ளார். பாரதியின் கவிவரிகள் பாடல்கள் சாகா வரம் பெற்றவையாக இன்றும் என்றும் மக்களின் மனங்களில் ஒலித்துக்கொண்டே இருக்கும் என்பது சத்தியம்!...

---

## தெரிந்துகொள்வோம்!...

1-நூல்கள் - நூல்களை எழுதியவர்கள்

| | |
|---|---|
| -திருக்குறள் | - திருவள்ளுவர் |
| -ஆத்திசூடி | - ஔவையார் |
| -பகவத்கீதை | - வேதவியாசர் |
| -மகாபாரதம் | - வேதவியாசர் |
| -இராமாயணம் | - வான்மீகி |
| -கம்பராமாயணம் | - கம்பர் |
| -சூலவம்சம் | - தர்மகீர்த்தி தேரர் |

2-நூல்கள்!...

| | | | | |
|---|---|---|---|---|
| -கி.மு | 2000 | ஆண்டுகள் | பழமையானது | திருக்குறள். |
| -கி.மு | 3000 | " | " | தொல்காப்பியம் |
| -கி.மு | 5000 | " | " | பரிப்பாடல் |
| -கி.மு | 7000 | " | " | அகத்தியம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாகவி பாரதியார்......

-கெங்கா ஸ்டான்லி-

சுப்பையா எனும் பெயர்கொண்டபாரதி எட்டையபுரத்தில் ஜமீன் குடும்பத்தில் 1882ம் ஆண்டு டிசம்பர்மாதம் 11 ம்திகதிபிறந்தார். தந்தை சின்னசாமி அய்யர். தாய்லட்சுமிஅம்மாள். இவருடைய இளமைப்பெயர் சுப்பிரமணியன். செல்லப்பெயர் சுப்பையா. இவருடைய 5 வதுவயதில் தாயின்மரணம் நிகழ்ந்தது. தந்தையார் மறுமணம் செய்துகொண்டார் சுப்பையாவின் இளவயதில் எட்டையபுரம் சமஸ்தானப்புலவர்கள் பெரும் சபையில் பாரதியின் புலமையைச் சோதித்து வியந்து அவருக்கு "பாரதி" என்ற பட்டம் வழங்கினர்.

சிறுவயதிலேயே பண்டிதர்களுடன் சொற்போர் நடத்துவார். சிறியவனாக இருந்தாலும் பாரதியின் பேரறிவு அவர்களை வியக்க வைத்தது. பாரதிக்கு 14 வயதில் செல்லம்மா என்ற 7 வயதுடைய பெண்ணுடன் திருமணம் நடந்தது. இப்படி இருக்கையில் பாரதியின் தந்தையாரின் மரணம் பெரும் பாதிப்பைக் கொடுத்தது. பின் தனது அத்தையாருடன் வசித்தார். காசி இந்துகலாசாலையில சமஸ்கிருதம், ஹிந்திபயின்றார்.திரும்ப எட்டையபுரம் வந்து வசிக்கும்பொது மதுரையில் "தனிமைஇரக்கம்" என்ற பாரதியின் முதல் பாடல். 1904ம் ஆண்டு, அச்சேறியது. அதற்குப்பிறகு மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் தற்காலிகத் தமிழ்ப்பண்டிதராகக் கடமைபுரிந்தார். அதிலும்ஆர்வமின்றி சென்னைக்குச் சென்றார். அங்கு "சுதேசமித்திரன் " பத்திரிகை உதவியாசிரியராக இருந்தார்.

முண்டாசுக் கவிஞன் சமூக சீர்திருத்தவாதியானார். அரசியலிலும் அக்கறை காட்டினார். 1908ம் ஆண்டு பாரதியின் சுதேசகீதங்கள் முதல்நூல் வெளியிடப்பட்டது. இவருடைய சமூக சீர்திருத்தப் பேச்சுகள், எழுத்துக்களினால் பிரச்சனைகள் சந்தித்திருகிறார். இவர் செய்த ஒருதொழிலும் நிரந்தரமில்லை. வேலை செய்யாவிட்டால் என்னசெய்வது? மனைவி பிள்ளைகள் பசியால்வாடினர். இதனால் செல்லம்மா பிள்ளைகளுடன் தனது பிறந்தகம் சென்றுவிட்டாள்.

பாரதி சாதிபார்க்கவில்லை. அதனால் அனைவரையும் வீட்டிற்குள் அனுமதித்தார். அதனால் அயலான அக்கிரகாரத்தில் பகையைத்தேடினார். ஆனால் அதனால் கவலைப்படவில்லை. தன்னால் எவ்வளவு எழுத முடியுமோ அவ்வளவு எழுதினார். அப்படி எழுதி அவர்வாழும் போது எந்தப்பலனும் கிடைக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்விடுதலைபற்றி எழுதினார். புதுமைப்பெண்பற்றி கனவுகண்டார். அவை இப்போ யதார்த்தம். ஆனால் பாரதிதான் பார்க்கவில்லை. சுதந்திரதிற்காகப் போராடினார். சுதந்திரதாகம் தீர்க்க உணர்வைத்தூண்டினார். அவரது பாடலைப் படித்தால் எம்மையறியாது என்று தணியும் இந்த சுதந்திரதாகம் என்றிருக்கும். இவர் ஒரு அறிவுப்பட்டறை அதில் கற்றுக்கொண்டோர் இன்னும் கற்போம் அதிகம் எனலாம். மூடநம்பிக்கையைக் களைந்தவர். அவருடைய நூல்கள் ஜன்ம பூமீ கவிதைதொகுப்பு 1909ம்ஆண்டு இரண்டாவது வெளியீடுசெய்தார். இதற்குப்பிறகு அவர் அதிக நூல்கள் எழுதினார். அதில் "மாதாமணிவாசகம்" நூல் 1910ம் ஆண்டுவெளியிட்டார். இன்னும் அவர் எழுதிய குயில், கண்ணன் பாட்டு. பாஞ்சாலிசபதம், இப்படி இன்னும் பல அவருடைய சுதேசகீதங்கள் "நாட்டுப்பாட்டு"என்னும் பெயரில் வெளியிடப்பட்டது.

இப்படி அவருடைய எழுத்துகளால் நன்மை அடைந்தோர சிலர். இகழ்ந்தோர் பலர். என்ன இருந்தாலும் அவருடைய கருத்தில் நிறைய நியாயங்கள் இருக்கின்றன. அது அப்போதைய மக்களுக்குப் புரியவில்லை என்பதுவருத்தம். ஆனால் அந்தநாட்களில் நாட்டு நிலைமை சரியில்லை. வெள்ளையர் ஆதிக்கம் மக்கள் நிலைதடுமாறி இருந்தகாலம். அவர்களையும் குறைகூறமுடியாது.

இவர் இவ்வளவு செய்தாலும் இவருடைய வாழ்வில் செல்லம்மாவை எப்படி நடத்தினார். அவளுக்குப் பெண்விடுதலை கொடுத்தாரா? அதை அவர் எண்ணவே இல்லை. ஒருவெள்ளைக்காரபெண் கொடுத்தவிளக்கம். அதற்கு பிறகுகொஞ்சம் செல்லம்மாவையும் மதித்து நடந்தாராம். இவர நாட்டிற்கு நன்மை செய்தாலும் வீட்டிற்குஎன்ன செய்தார் என்ற கேள்வியும் இங்குண்டு.இவர் தன்வாழ்வில் அரசியலிலும் தண்டனை சிறை,விடுதலைப் போராட்டம், அவர்களின் சந்திப்பு, இவை எல்லாம். இடையில் நடந்தது. ஆனால் நாடு சுதந்திரம் அடையும் போது அவரில்லை. பாரதி 1921 ம்ஆண்டு செப்டம்பர் மாதம் 11 திகதி யானையால்தூக்கி எறியப்பட்டதால். இவ்வுலகைவிட்டு உயிர்நீத்தார். அவர் உடல் மட்டும் தீயில் எரிக்கப்பட்டது. ஆனால் அவர்புகழ் இன்னும் நிலைத்து நிற்கிறது. அவருடைய கனவுகள் நனவாகிவருகிறது. இப்போ பாரதி வந்து பார்த்தால் மகிழ்ச்சி அடைவார்.

முண்டாசுக் கவிஞன் பாரதியின் எழுத்துக்கள் மாணவருக்கும் பாடமாக இருகிறது. வாழும் போது வாழ்த்தப்படாத "பாரதி" இறந்தபின் வாழ்த்தப்படுகிறார். போற்றப்படுகிறார். இதுநியதி.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பாராளுமன்றம் 2020 தேர்தல் முடிவுகள்.... (ஒரே பார்வையில்)

| | | | |
|---|---|---|---|
| 01-ஶ்ரீ.ல.பொ.ஜ.பெரமுனை | -68.53.693 | (59.09வீதம்) | - 145 ஆசனங்கள் |
| 02-ஐக்கிய மக்கள் சக்தி | -27.71.984 | (23.90வீதம்) | - 54 ஆசனங்கள் |
| 03-தே.ம.சக்தி(ஜே.வி.பி) | - 4.45.958 | (03.84வீதம்) | - 03 ஆசனங்கள் |
| 04-தமிழ் தே.கூட்டமைப்பு | - 3.27.168 | (02.82வீதம்) | - 10 ஆசனங்கள் |
| 05-ஐ.தே.கட்சி | - 2.49.435 | (02.15வீதம் | - 01 ஆசனம் |
| 06-அ.இ.தமிழ் காங்கிரஸ் | - 67.766 | (00.58வீதம் | - 02 ஆசனங்கள் |
| 07-அ.ஜ.ப.கட்சி | - 67.758 | (00.58வீதம்) | - 01 ஆசனம் |
| 08-தமிழ் மக்.விடுதலை.புலிகள் | - 67.692 | (00.57வீதம்) | - 01 ஆசனம் |
| 09-ஶ்ரீ.ல.சு.க (யாழ்ப்பாணம்) | - 66.579 | (00.57வீதம்) | - 01 ஆசனம் |
| 10-ஈ.பி.டி.பி | - 61.464 | (00.53வீதம்) | - 02 ஆசனங்கள் |
| 11-முஸ். தேசிய முன்னணி | - 55.981 | (00.48வீதம் | - 01 ஆசனம் |
| 12-த.ம.தே.கூ.முன்னணி | - 51.301 | (00.44வீதம் | - 01 ஆசனம் |
| 13-அ.இ.ம.காங்.முஸ்லீம் | - 43.319 | (00.37வீதம்) | - 01 ஆசனம் |
| 14-தேசிய காங்கிரஸ் முஸ்லீம் | - 39.272 | (00.37வீதம்) | - 01 ஆசனம் |
| 15-ஶ்ரீ.ல.முஸ்லீம் காங்கிரஸ் | - 34.428 | (00.3.வீதம்) | - 01 ஆசனம் |
| | | மொத்தம் | - 225 ஆசனங்கள் |

(இந்த 15 கட்சிகளும்தான் ஆசனங்களைப் பெற்றுக்கொண்டன)

## தேர்தல்களம்-2020-வடக்கு கிழக்கு தேர்தல் முடிவுகள்

-05-08-2020நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் 73வீத வாக்குப் பதிவு இடம்பெற்றிருக்கின்றன.

-யாழ்ப்பாணம் 72 வீதம், வன்னி 74 வீதம், மட்டக்களப்பு 76 வீதம், திருகோணமலை 74 வீதம், அம்பாறை 73 வீதம்

-தமிழர் தாயகப் பிரதேசங்களில் ஆகக்கூடுதலாக மன்னார் மாவட்டத்தில்தான் 79.40 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

-வடமாகாண முன்னாள் முதலமைச்சர் வி.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர்களான ச.சந்திரகாந்தன் (பிள்ளையான்) அகமட் செய்னு நசீர்ஆகியோர் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-யாழ்-கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
வெற்றிபெற்ற கட்சிகளும் பெற்ற வாக்குகளும்..

| | | |
|---|---|---|
| 1. த.தே.கூட்டமைப்பு | - 1.12.967 | - 3 ஆசனங்கள் |
| 2. அகில.இல.தமிழ்.காங்கிரஸ் | - 55.303 | - 2 ஆசனங்கள் |
| 3. ஸ்ரீ.ல.சுதந்திரக்கட்சி | - 49.373 | - 1 ஆசனம் |
| 4. ஈ.ம.ஜ.கட்சி (ஈபிடிபி) | - 45.797 | - 1 ஆசனம் |
| 5. தமிழ்மக்கள் தேசிய முன் | - 35.927 | - 1 ஆசனம் |

தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் (எம்.பி)

| | |
|---|---|
| 1. சி.சிறீதரன் | - 35.884 |
| 2 ம.சுமந்திரன் | - 27.384 |
| 3. த.சித்தார்த்தன் | - 23.840 |
| 4. பொ.கஜேந்திரன் | - 31.658 |
| 5. டக்ளஸ் தேவானந்தா | - 32.3467 |
| 7-வி.விக்னேஸ்வரன் | - 21.556 |
| 8-1-இ.அங்கயன் | - 36.895 |

---

விருப்பு வாக்குகள்... தமிழ்தேசியகூட்டணி

| | |
|---|---|
| 1-சி.சிறீதரன் | - 35.884 |
| 2-ம.சுமந்திரன் | - 27.384 |
| 3-த.சித்தார்த்தன் | - 23.840 |
| 4-சசிகலா ரவி | - 23.098 |
| 5-ஈ.சரவணபவன் | - 20.392 |
| 6-மாவை சேனாதிராசா | - 20.358 |
| 7-பா.கஜதீபன் | - 19.058 |
| 8-இ.ஆர்னோல்ட் | - 15.386 |
| 09-கு.சுரேந்திரன் | - 10.917 |
| 10-வே.தபேந்திரன் | - 5.952 |

விருப்பு வாக்குகள் இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சி

| | |
|---|---|
| 1-பொ.கஜேந்திரன் | - 31.658 |
| 2-செ.கஜேந்திரன் | - 24.794 |
| 3-வி.மணிவண்ணன் | - 22.741 |
| 4-க.சுகாஸ் | - 21.463 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பு வாக்குகள் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈபிடிபி)

| | | |
|---|---|---|
| 1-டக்ளஸ் தேவானந்தா | - | 32.346 |
| 2-மு.ரெமிடியஸ் | - | 10.780 |
| 3-ஐ.சிறிரங்கேஸ்வரன் | - | 10.545 |

விருப்பு வாக்குகள் தமிழ்மக்கள் தேசியக்கூட்டணி

| | | |
|---|---|---|
| 1-வி.விக்னேஸ்வரன் | - | 21.556 |
| 2-க.அருந்தவபாலன் | - | 12.674 |
| 3-க.சிவாஜிலிங்கம் | - | 10.121 |
| 4-அனந்தி சிறிதரன் | - | 9.193 |
| 5-சு.பிரேமச்சந்திரன் | - | 7.756 |
| 6-ந.சிறிகாந்தா | - | 3.702 |

விருப்பு வாக்குகள் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி

| | | |
|---|---|---|
| 1-இ.அங்கயன் | - | 36.895 |

---

## வன்னி தேர்தல் முடிவுகள் - 2020
(மன்னார், முல்லைத்தீவு, வவுனியா)

| | | | | |
|---|---|---|---|---|
| 1-தமிழ் தேசிய கூட்டமைப்பு | - | 69.916 | - | 3 ஆசனம் |
| 2-ஸ்ரீ.ல.பொ.ஜ.பெரமுனை | - | 42.524 | - | 1 ஆசனம் |
| 3-ஐ.ம.சக்தி (றிசாத் பதியுதீன்) | - | 37.883 | - | 1 ஆசனம் |
| 4-ஈழமக்கள் ஜ.கட்சி (ஈபிடிபி) | - | 11.308 | - | 1 ஆசனம் |
| 5-த.ம.தே.முன்னணி | - | 8.780 | - | 0 |
| 6-அ.இ.த.காங்கிரஸ் | - | 8.232 | - | 0 |

தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களும் கட்சிகளும்
அவர்கள் பெற்ற விருப்பு வாக்குகள்...

| | | | | |
|---|---|---|---|---|
| 1-றிசாத் பதியுதீன் | - | 28.203 | - | ஐ.ம.சக்தி |
| 2-சார்ள்ஸ் நிர்மலநாதன | - | 25.668 | - | தமிழ் தேசிய கூட்டமைப்பு |
| 3-செ.அடைக்கலநாதன் | - | 18.56 | - | தமிழ் தேசிய கூட்டமைப்பு |
| 4-வி.நோகதாரலிங்கம் | - | 15.190 | - | தமிழ் தேசிய கூட்டமைப்பு |
| 5-காதர் மஸ்தான் | - | 13.454 | - | ஸ்ரீ.ல.பொ.ஜ.பெரமுனை |
| 6-கு.திலீபன் | - | 3.203 | - | ஈ.ம.ஜ.கட்சி (ஈபிடிபி) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை மாவட்டம்--

தெரிவு செய்யப்பட்ட கட்சிகள்

| | | |
|---|---|---|
| 1-ஐக்கிய மக்கள் சக்தி (சஜித்பிரேமதாச ) | - | 2 ஆசனங்கள் |
| 2-ஸ்ரீ.ல.பொ.ஜ.பெரமுனை | - | 1 ஆசனம் |
| 3-தமிழ் தேசிய கூட்டமைப்பு | - | 1 ஆசனம் |

தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களும் கட்சிகளும் அவர்கள் பெற்ற விருப்பு வாக்குகள்.

| | | |
|---|---|---|
| 1-எஸ் எம் தௌபீக் | - 43.759 | - ஐ.ம.சக்தி |
| 2-இம்ரான் மஹ்ரூப் | - 39.029 | - ஐ.ம.சத்தி |
| 3-கபிலருபஅத்துகோரல | - 30.056 | - ஸ்ரீ.ல.பொ.ஜ.பெரமுனை |
| 4-இ.சம்பந்தன் | - 21.422 | - தமிழ்தேசியகூட்டமைப்பு |

---

## மட்டக்களப்பு மாவட்டம்...

தெரிவு செய்யப்பட்ட கட்சிகளும் வாக்குகளும்

| | | |
|---|---|---|
| 1-தமிழ் தேசிய கூட்டமைப்பு | 79.460 | - 2 ஆசனங்கள் |
| 2-தமிழ் மக் விடு.புலி.கட்சி | 67.784 | - 1 ஆசனம் |
| 3-ஸ்ரீ.ல.முஸ்.காங்கிரஸ் | 34.428 | - 1 ஆசனம் |
| 4-ஸ்ரீ.ல.பொ.ஜ.பெரமுனை | 33.424 | - 1 ஆசனம் |

தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் கட்சிகளும் அவர்கள் பெற்ற விருப்பு வாக்குகளும்...

| | | |
|---|---|---|
| 1-ச.சந்திரகாந்தன் (பிள்ளையான்) | -தமிழ்.மக்.விடு.புலி.கட்சி | - 54.198 |
| 2-சாணக்கியன் ராகுல் | -தமிழ்தேசியகூட்டமைப்பு | - 33.332 |
| 3-கோ கருணாகரன் | -தமிழ்தேசியகூட்டமைப்பு | - 26.382 |
| 4-வியாழேந்திரன் | -ஸ்ரீ.ல.பொ.ஜ.பெரமுனை | - 22.218 |
| 5-அகமட் செய்னு நசீர் | -ஸ்ரீ.ல.முஸ்.காங்கிரஸ் | - 17.599 |

---

## அம்பாறை(திகாமடுல்ல) மாவட்டம்..

தெரிவு செய்யப்பட்ட கட்சிகளும் வாக்குகளும்

| | | |
|---|---|---|
| 1-தமிழ் தேசிய கூட்டமைப்பு | 25.255 | - 0 |
| 2-இல.தமிழர் மகாசபை(கருணா) | 29.379 | - 0 |
| 3-ஸ்ரீ.ல.பொ.ஜ.பெரமுனை | 1.73.794 | - 3 ஆசனங்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 4-ஐ.ம.சக்தி | -1.02.274 | - 2 ஆசனங்கள் | |
| 5-இ.ம.காங்கிரஸ்(முஸ்லீம்) | - 43.319 | - 1 ஆசனம் | |
| 6-தேசியகாங்கிரஸ்(முஸ்லீம்) | - 38.911 | - 1 ஆசனம் | |

தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களின் கட்சிகளும் அவர்கள் பெற்ற விருப்பு வாக்குகளும்...

| | | |
|---|---|---|
| 1-விமலவீர திஸநாயக்கா | -ஸ்ரீ.ல.பொ.ஜ.பெரமுனை | 63.594 |
| 2-டி.சி.வீரசிங்க | - ஸ்ரீ.ல.பொ.ஜ.பெரமுனை | 56.000 |
| 3-திலக் ராஜபக்ஸ | - ஸ்ரீ.ல.பொ.ஜ.பெரமுனை | 54.203 |
| 4-எம் எச் எம் ஹரிஸ் | - ஐக்கிய மக்கள்சக்தி | 36.850 |
| 5-பைசல் காசிம் | - ஐக்கிய மக்கள்சக்தி | 29.423 |
| 6-மொகமட் முஸரப் | - இ.ம.காங்கிரஸ்(முஸ்லீம்) | 18.389 |
| 7-ஏர்.எம் அதவுல்லா | - தேசியகாங்கிரஸ்(முஸ்லீம்) | 35.697 |

---

## தேர்தல்களம்-2020 - 9 வது பாராளுமன்றம் சில குறிப்புகள்:-

-தேர்தல் நடைபெற்ற திகதி 05-08-2020

-வாக்களிக்கத் தகுதி பெற்றவர்கள் 1.62.63.885 (100 வீதம்)

வாக்களித்தவர்கள் -1.23.43.302 (75.89 வீதம்)

வாக்களிக்காதோர் 39.20.583 (24.11 வீதம்)

நிராகரிக்கப்பட்ட வாக்குகள் 7.44.373 (04.58 வீதம்)

-தபால் வாக்காளர்கள் - 7.05.085

-நாடு முழுவதும் வாக்களிப்பு வீதம் 2020ல் 71 வீதம் (2015 தேர்தலில் 74 வீதம்)

-போட்டியாளர்கள் 40 கட்சிகளைச் சேர்ந்தவர்கள் - 3652 பேர்

380 சுயேட்சைக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் - 3800 பேர்

மொத்தம் - 7452 பேர்

-வாக்கு எண்ணும் நிலையங்கள் - 2.820

-வாக்களிப்பு நிலையங்கள் - 12.985

-தேர்தல் பணியாளர்கள் - 4.00.000 பேர்

-பாதுகாப்பு நடவடிக்கை - 69.000 பொலிசார்

-சுகாதாரப் பணியாளர்கள் - 8.000 பேர்

-தேர்தல் சட்டங்களை மீறிய சம்பவங்கள் சுமார் 8.657 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

-அமைதியான தேர்தல் என உலகநாடுகள் பாராட்டியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-பொதுஜனப்பெரமுனை வரலாறுகாணாத வெற்றி.2016 ம்ஆண்டுதான் பொதுஜனப்பெரமுனைக்கட்சி உருவானது 4 ஆண்டுகளில் இது பெற்ற வெற்றி குறிப்பிடத்தக்க விடையமாகும்.
-10 பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர்.
-பொது ஜனப்பெரமுனை கட்சி வென்ற 145 இடங்களில் 14 இடங்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியினராவர்.
-1977 ம்ஆண்டு ஜே ஆர் ஜெயவர்த்தனா பெற்ற வெற்றிக்குப் பின்பு வரலாற்று வெற்றியை மகிந்தா தலைமையிலான கட்சி வெற்றி.
-2005, 2010 தேர்தலில் வெற்றிபெற்று ஜனாதிபதவி வகித்ததுடன் 2004,2018,2019 என பிரதமர் பதவி வகித்து தற்போது 2020ல் 4வது தடவையாக மகிந்த ராஜபக்ஸ பிரதமராகியுள்ளார்.
-இலங்கை தேர்தல் வரலாற்றில் மிக அதிகப்படியான விருப்பு வாக்குகளாக 5.27.364 பெற்றுச் சாதனை படைத்துள்ளார் மகிந்தா. இதே வேளை மிகக்குறைந்த விருப்பு வாக்குகளாக 3.203 பெற்று வன்னியிலிருந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர் தெரிவாகியுள்ளார்.
-சுமார் 75 வருட பழமை வாய்ந்த ஐக்கிய தேசியக்கட்சி ஒரு ஆசனத்தைக்கூடப்பெறமுடியாத படுதோல்வி
-ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர், செயலாளர்கூட வெற்றிபெற முடியவில்லை.
-இலங்கையிலுள்ள 21 தேர்தல் மாவட்டங்களில் 18 மாவட்டங்களை ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனையும் 3 மாவட்டங்களை தமிழர் விடுதலைக்கூட்டமைப்பும் வெற்றி பெற்றன (யாழ், வன்னி, மட்டக்களப்பு)
-தலைநகர் கொழும்பு ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டையாக இருந்துவந்தது. ஆனால் இத்தேர்தலில் தோல்விகண்டுள்ளது.
-முன்னாள் எம்.பிகள் 73 பேர் தோல்வியடைந்தனர் புதியவர்கள் 58 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.
-தந்தை-மகன் என 4 சோடிகள் இந்தமுறை வெற்றிபெற்றுள்ளனர்
1-மகிந்த ராஜபக்ஸ - நாமல் ராஜபக்ஸ
2-சமல் ராஜபக்ஸ - ஷஷிந்த ராஜபக்ஸ
3-ஜனகபண்டார தென்னக்கோன் - பிரமித பண்டாரதென்னக்கோன்
4-தினேஸ் குணவர்த்தனா - யதமினி குணவர்த்தனா
-இத்தேர்தலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் வெற்றிபெற்று பாராளுமன்றம் செல்கிறார்கள்
1-கோட்டபாய ராஜபக்ஸ (ஜனாதிபதி) 2-மகிந்த ராஜபக்ஸ (பிரதமர்)
3-சமல் ராஜபக்ஸ (அமைச்சர்) 4-நாமல் ராஜபக்ஸ (அமைச்சர்)
5-சசீந்திர ராஜபக்ஸ 6-நிபுண ரணவக்க (ஜனாதிபதியின் மைத்துனர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-இந்தமுறை சம்பந்திகள் இருவர் வெற்றிபெற்று பாராளுமன்றம் செல்கின்றனர்.வாசுதேவ நாணயக்காரவும் முன்னாள் முதலமைச்சர் வி விக்னேஸ்வரனும்
-இத்தேர்தலில் 3 முனைவர்கள் (கலாநிதி) ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனை சார்பில் தெரிவு செய்யப்பட்டனர்.
1-பேராசிரியர் நாலக கொடஹேவா -கம்பகஹா - 3.25.479
2-பேராசிரியர் குணபால ரத்னசேகர -குருநாகல் - 1.41.991
3-பேராசிரியர் ஜயசுமன -கொழும்பு - 1.33.980
-சிறையில் இருந்தவாறே 2 பேர் அமோக வெற்றிபெற்றுள்ளனர்
1-பிரேம்லால் ஜயசேகர -இரத்தினபுரி பெற்ற வாக்குகள் 1.04.237
அடுத்தவது (பிள்ளையான்) ச சிவநேசதுரை பெற்ற வாக்குகள் 54.198
-தமிழர் தேசியக் கூட்டமைப்பு இத்தேர்தலில் 1.88.795 வாக்குகளை இழந்ததுடன் 6 ஆசனங்களையும் இழந்தது 2015ல் 5.15.963 வாக்குகள் 16 எம் பி - 2020ல் 3.27.168 10 எம் பி, எனத்தோல்வி கண்டுள்ளது.
-2020 தேர்தலில் யாழ் -3 வன்னி -3 மட்டக்களப்பு-2 திருகோணமலை-1 தேசியப்பட்டியல்-1 என 10 ஆசனங்களைப் பெற்றிருக்கின்றது.
-தமிழ்தேசியக்கூட்டமைப்பு வட கிழக்கில் இந்தமுறை 5 ஆசனங்களை இழந்திருக்கின்றது.
-1960ம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து அல்பிரட் துரையப்பா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் வெற்றி பெற்றார். 60 ஆண்டுகளுக்குப்பின் இ.அங்கயன் 49.373 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.
-வடமாகாணத்தில் 9 பெண்கள் போட்டியிட்டனர் ஒருவர் கூட வெற்றி பெறமுடியவில்லை.
-அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பிரதித்துவத்தை இம்முறை முற்றாக இழந்துள்ளது.
-தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா செயலாளர் துரைராசசிங்கம் இருவரும் தோல்விகண்டனர்.
-அம்பாறையில் தமிழர்விடுதலைக்கூட்டணி 25.255 வாக்குகள் கருணா அம்மானின் கட்சி 29.379 வாக்குளைப் பெற்றும் ஒருவர்கூட வெற்றிபெறமுடியாமல் போனது. 26 வருடங்களின்பின் தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டது வரலாறாகும்.
-33 வருடங்களின் பின் புத்தளம் மாவட்டத்தில் இருந்து ஒரு முஸ்லீம் பிரதிநிதி தெரிவு செய்யப்பட்டார் வடக்கு, கிழக்கு, கொழும்பு, மலையகம் என 28 தமிழர்களும் 19 முஸ்லீம்கள் என 47 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.
-உலகம் முழுவதும் கொரோனா அச்சுறுத்தலுக்கும் மத்தியில் தென்கிழக்கு ஆசியாவில் தேர்தலை நடத்தி முடித்த சாதனையை இலங்கை பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Coronavirus-Fälle weltweit

Fälle bislang STAND: **06.09.2020, 18 Uhr**

| **26.918.687** | **≈18.011.400** | **880.773** |
|---|---|---|
| bestätigt | wieder gesund | Todesfälle |

Fälle seit 0 Uhr

| +223.015 | +215.260 | +4.061 |
|---|---|---|

**Fälle** | pro 100.000 EW

| | | | |
|---|---|---|---|
| USA | 6.218.816 | 2.300.353 | 188.121 |
| Brasilien | 4.123.000 | 3.498.999 | 126.203 |
| Indien | 4.113.811 | 3.180.865 | 70.626 |
| Russland | 1.022.228 | 838.680 | 17.768 |
| Peru | 683.702 | 506.422 | 29.687 |
| Kolumbien | 658.456 | 507.770 | 21.156 |
| Südafrika | 636.884 | 561.204 | 14.779 |
| Mexiko | 629.409 | 518.844 | 67.326 |
| Spanien | 498.989 | 150.376 | 29.418 |
| Argentinien | 471.806 | 349.132 | 9.807 |
| Chile | 422.510 | 394.399 | 11.592 |
| Iran | 386.658 | 333.900 | 22.293 |
| Großbritannien* | 347.152 | - | 41.551 |
| Bangladesch | 326.157 | 221.275 | 4.479 |
| Saudiarabien | 320.688 | 296.737 | 4.081 |
| Frankreich | 309.156 | 87.447 | 30.724 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறப்பு:- 09-07-1940 இறப்பு:- 09-08-2020

ஓமந்தை (பிறந்த இடம்) அல்வாய் தெற்கு Ilford United Kingdom

## அமரர் தம்பிமுத்து மார்க்கண்டு பி.ஏ (சிறப்பு)
## ( தமிழார்வலர் - இலக்கியவாதி )

முன்னாள் அரசாங்க அதிபர் வவுனியா மாவட்டம்

வடக்கு-கிழக்கு மாகாண காணி, விவசாய, கால்நடை

அபிவிருத்தி, நீர்ப்பாசன அமைச்சின் முன்னாள் செயலாளர்

திரு எஸ் ரி மார்க்கண்டு என்று அழைக்கப்பட்டவரும் இலங்கை நிர்வாகசேவையின் உயர் அதிகாரியாகக் நீண்டகாலங்கள் கடமைபுரிந்து ஓய்வுபெற்று லண்டனில் வசித்துவந்த வேளையில் 09-08-2020 அன்று அமரராகிய செய்தி என் மனதைப் பாதித்தது. தாய்நாட்டில் அவரோடு பழகியது மட்டுமல்லாமல் புலம்பெயர் நாட்டிலும் என்னோடு அன்பாகவும் ஆதரவாகவும் நட்பாகவும் ஆலோசகராகவும் மிகநீண்டகாலம் வாழ்ந்தவின் இறப்புச் செய்தி கேட்டு கவலைகொண்டு, அவர்பற்றிய சிறு குறிப்பை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

முந்திய காலத்தில்தான் (காரியாதிகாரி) டி.ஆர்.ஓ (DRO) (Divisional Revenue Officer) என்று அழைக்கப்பட்ட பிரதேச காரியாதிகாரி முறை இருந்தது. இந்த டி ஆர் ஓவாகத்தான் திரு தம்பிமுத்து மார்க்கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டம் துணுக்காய் பிரதேசத்திற்கு வருகிறார். இவர் ஒரு பட்டதாரி. அரச நிர்வாக சேவைப் பரீட்சையில; (C.A.S) Ceylon Administation Service (தற்போது S.L.A.S என்று அழைக்கப்படுகின்றது) சித்திபெற்று முதல் நியமனம் கிடைக்கின்றது.

இப்பிரதேசத்தில் பல சாதிய சமய, சமூகப் பழக்க வழக்கங்களைக்கொண்ட பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்துவந்தனர். இதனால் மக்களிடையே காணிப்பிரச்சனை, குடிகாரரின் தொல்லைகள், ஊர்ச்சண்டியன்மாரின் அட்டகாசம், குடும்பப் பிரச்சனைகள், இளையோர் பிரச்சனைகள், களவு, கொள்ளை, கொலை என நிறையவே காணப்பட்டன.

அப்போது இப்பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு இப்பகுதியில் பொலிஸ்நிலையம்கூட கிடையாது. சகல நிர்வாக நீதிப்பொறுப்புக்கள் அனைத்தும் இவரிடமே இருந்தன. இவ்வேளையில்தான் இவரின் நிர்வாகத் திறன் வெளிப்பட்டது. குற்றம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுத்தார். பொலிஸ்வேலையையும் பார்த்து நீதி, நியாயத்தை நிலை நாட்டினார். சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி அமைதியை நிலைநாட்டினார். அந்தக்காலகட்டத்தில் ரவுடித்தனம் புரிவோர், குளப்படி செய்வோர், குடிகாரர், சண்டியன்மார் எல்லோரும் இவரைக் கண்டால் குலை நடுக்கம்தான். ஏன் இவரின் ஜீப் வண்டியைக் கண்டவுடன் ஓடி ஒழித்தார்கள். வீதி ஓரம் ஒழித்து ஒதுங்கி நின்றவர்கள் எத்தனைபேரை நான் கண்டிருக்கிறேன்.

அனைத்து அநியாயங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்து மக்களின் நீதி நியாயமான அமைதி வாழ்வுக்கு வித்திட்ட திறமையான அரச அதிகாரி என்றுதான் நான் கூறுவேன். இவற்றைவிட இவர் மண்பற்று, மொழிப்பற்றுக் கொண்டு செயற்பட்டார். தமிழர் நிலங்களில் தமிழினமும், தமிழும் கோலோச்சி வாழவேண்டும் என்பதில் தாகம்கொண்டு செயற்பட்டார்.

பல ஏழை மக்களுக்கு அரசகாணிகளைப் பங்கிட்டுக் கொடுத்து அவர்களை வாழவைத்தார். குடியேற்றத் திட்டமான இப்பிரதேசத்தின் விவசாய பொருளாதார முன்னேற்றத்திற்குப் பல திட்டங்களை வகுத்துச் செயற்பட்டார். வருடாவருடம் முத்தமிழக்கு விழா எடுத்து கலை விழாக்களைக் கொண்டாடித் தமிழையும் தமிழ் மக்களையும் சிறப்பித்தார். நானும் அந்தப் பிரதேசத்தில் (மல்லாவி-யோகபுரம்) வாழ்ந்தபடியால் இவரைப்பற்றிய விபரங்களை அப்போது அறிந்துகொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மண்" சஞ்சிகையோடு இவர்...

யேர்மனியில் கடந்த 31 வருடங்களாக இயங்கிவரும் மண் சஞ்சிகைக்காக இவர் பதவியில் இருந்தபோதும் ஓய்வுபெற்றபோதும் பலவகையான உதவிகளைச் செய்து வந்திருக்கிறார். மண் சஞ்சிகையின் நீண்டகால வாசகராகவும் இருந்திருக்கிறார். அவ்வப்போதெல்லாம் எனக்குப் பல அறிவுரைகளையும் ஆலோசனைகளைக் கூறி மண் சஞ்சிகையையும் என்னையும் நல்வழிப்படுத்தியிருக்கிறார். சஞ்சிகைக்குப் பல தடவைகள் பல ஆக்கங்கள் எழுதியிருக்கிறார்.

இவைமட்டுமல்ல தனது பதவிக்காலங்களிலும் வயதான காலங்களிலும் வடக்கு-கிழக்கு மாகாணத்திலிலுள்ள ஆதரவற்ற சிறார் இல்லங்களை நேரடியாகப் பார்வையிட்டு அறிக்கைகளையும் சிபார்சுகளையும அடிக்கடி அனுப்பிக்கொண்டிருந்த படியால் மண் சஞ்சிகையால் சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக தாயக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவும் பணிகளை சரிவரவும் உத்வேகத்துடனும் செய்யக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்க விடையமாகும்.

அன்னாரின் சமூகப்பணிகளை இச்சந்தர்ப்பத்தில் வாழ்த்தி நினைவு கொண்டு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம். மண் சஞ்சிகையின் 15, 20, 25 ஆண்டு நிறைவு ஆண்டு மலர்களில் இவரின் வாழ்த்துக்கள் அலங்கரித்திருக்கின்றன. தமிழ், கல்வி, அரசியல், சுகாதாரம், தாயகம் எனப் பல்வகைக் கட்டுரைகளை எழுதியதுடன் நல்லதொரு வாசகராகவும் படைப்பாளியாகவும் இவரை அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவுகள் நட்புக்களுக்கு எமது சஞ்சிகையின் சார்பில் ஆறுதல் கூறுகின்றோம். மண்ணையும் மக்களையும், மொழியையும் இனத்தையும் ஆழமாக நேசித்த இந்தப் பெருந்தகைக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்!...

ஓம் சாந்தி!.... ஓம் சாந்தி!....

பிரதம ஆசிரியர்

மண் கல்வி, கலை, இலக்கிய, சமூக சஞ்சிகை

(மண் சஞ்சிகையின் முகப்புத்தகத்திலும் இவரைப்பற்றிய விரிவான கட்டுரை ஒன்றைப் பதிவிட்டிருக்கிறேன்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பாலியல் சம்பவங்கள் அதிகரிப்பு...



இலங்கையில் கடந்த ஆறு மாதங்களில் 5.442 சிறுவர் பாலியல் சம்பவங்களும் 1.642 பெண்கள் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களுமாக மொத்தம் 7.084 சம்பவங்கள் இடம்பெற்றதாக இலங்கை சிறுவர் தேசிய பாதுகாப்பு நிறுவனத்தின் அறிக்கை வெளியிட்டுள்ளது. நாடு எவ்வளவு முன்னேற்றமடைந்தாலும் இந்தக்கொடிய சம்பவத்தை முடிவுக்குக் கொண்டு வரமுடியாமல் உள்ளது. இந்த உலகத்தையே உருவாக்க மூலகாரணமான பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எந்த மதமும் இனமும் ஏற்றுக்கொள்ளாது. எனவே இதை ஒழித்துக்கட்ட அனைத்துத் தரப்பினரும் பாடுபட வேண்டும். பாதுகாப்புத் துறைகளும் உடனுக்குடன் சரியான நடவடிக்கை எடுக்கப்படுமானால் குறைத்துக் கொள்ளலாம் என சமூக ஆர்வலர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர். கடந்தகால சம்பவங்களைப் பார்ப்போம்...

| ஆண்டு | -கற்பழிப்பு சம்பவங்கள் | -தீவிரபாலியல் - சம்பவங்கள் | -சிறுவர் துஷ்பிரயோக -சம்பவங்கள் |
|---|---|---|---|
| 2012 | -1.728 | -674 | - 863 |
| 2013 | -1.637 | -692 | - 735 |
| 2014 | -1.565 | -624 | - 772 |
| 2015 | -1.557 | -661 | - 830 |
| 2016 | -1.565 | -552 | - 800 |
| 2017 | -1.304 | -508 | - 661 |
| 2018 | -1.284 | -520 | - 755 |
| 2019 | -1.280 | -544 | - 601 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி பத்மாவதிஅம்மாள் சோமகாந்தன்...
# (பத்மா)



தி.ஞானசேகரன்...

**பிறப்பு:- 05-03-1931 இறப்பு 15-07-2020**
**வண்ணார்பண்ணை(பிறந்த இடம்) கொழும்பு (இறுதியாக வாழ்ந்த இடம்)**
**மூத்த எழுத்தாளர் - இலக்கியவாதி**

இலக்கிய உலகில் சுடர் விட்டு பிரகாசித்த பத்மா சோமகாந்தன் பதினேழு வயதில் தொடங்கி 89 வயது வரை 70 வருடங்கள் ஓயாமல் இலக்கியப் பணியாற்றிய சாதனைப் பெண்ணின் மறைவு

ஈழத்து இலக்கிய உலகில் சுடர்விட்டுப் பிரகாசித்த மூத்த பெண் படைப்பாளியான திருமதி பத்மா சோமகாந்தன் 15-.07.-2020 அன்று அமரத்துவம் அடைந்து விட்டார் என்ற செய்தி இலக்கிய உலகைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

பத்மா சோமகாந்தன் தனது பதினேழாவது வயதில் பாடசாலை மாணவியாக இருந்த காலத்தில் "சுதந்திரன்" பத்திரிகையில் எழுதிய "இரத்தபாசம" என்ற சிறுகதை மூலம் இலக்கிய உலகிற்கு அறிமுகமானவர். 1951இல் எஸ்.டி. சிவநாயகத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த "சுதந்திரன்" பத்திரிகை ஒரு சிறுகதைப் போட்டியை நடத்தியது. அந்தப் போட்டியில் முதற்பரிசு பெற்ற சிறுகதையே பத்மா சோமகாந்தன் எழுதிய "இரத்தபாசம்" என்ற சிறுகதையாகும்.

பத்மா, 05.-03-.1931 அன்று யாழ் வண்ணார்பண்ணையில் பிறந்தவர். பத்மாவின் தந்தையார் பஞ்சநதேஸ்வரக் குருக்கள் மிக ஆசாரமான ஒரு பிராமணக் குடும்பத்தின் தலைவர். தாயார் அமிர்தாம்பிகை அம்மா.

பத்மாவின் இளமைக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் சாதிக் கட்டுப்பாடு மிகவும் வலிமை பெற்றிருந்தது. தாழ்த்தப் பட்டவர்களுக்கு அநேக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாடுகளை விதித்து அவர்கள் தலைதூக்கி விடாமல் பார்த்துக் கொண்டார்கள். அதேபோன்று உயர் சாதிக்காரரர்களாக கூறப்பட்டோர் எவராவது தங்களுக்குரிய கட்டுப்பாடுகளை மீறினாலும் அவர்களைத் தூரத் தள்ளி வைத்து விடுவார்கள்!

பிராமண குலத்தில் பிறந்த பத்மா, சாதிக் கொடுமைகள் பற்றியும் பிற சீர்திருத்தக் கருத்துகள் பற்றியும் சிறுகதைகள் எழுதியதும், பின்னால் தமது கணவருடன் சேர்ந்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முக்கிய உறுப்பினராக நின்று உழைத்ததும் இவருடைய இயல்பைக் காட்டி நிற்கின்றன.

சிறுவயது முதலே இவர் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் மிகுந்த ஆவலோடு வாசித்து வந்ததும், அவற்றில் வெளிவந்த சீர்திருத்தக் கருத்துக்களால் ஈர்க்கப் பட்டமையுமே இவருடைய இந்த இயல்புக்குக் காரணங்களாய் அமைந்தன.

1950களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம் என ஒரு சங்கம் இருந்தது. அந்தச் சங்கம் "சிறுகதை அரங்கம்" என்ற ஒரு புதுமையான நிகழ்ச்சியை நடத்தியது. அந்த அரங்கத்தில் அப்போது சிறந்த சிறுகதை எழுத்தாளர்களாகக் கணிக்கப் பெற்ற ஐந்து பேர் அந்த நிகழ்ச்சிக்காகவே புதிதாக எழுதிய சிறுகதைகளை வாசிப்பார்கள். எல்லாக் கதைகளுக்கும் ஒரே தலைப்பு "வெறி". அந்த அரங்குக்குத் தலைமை தாங்கியவர் இரசிகமணி கனக செந்திநாதன். சிறுகதைகளை வாசித்தவர்கள் வரதர், சிற்பி, டானியல், டொமினிக் ஜீவா மற்றவர் ஒரு பெண் எழுத்தாளர். அவர்தான் பத்மா! அக்காலத்திலேயே பத்மாவும் ஒரு நல்ல சிறுகதை எழுத்தாளராகக் கணிக்கப்பட்டிருக்கிறார்.

1954இல் மாணவியாக சுதந்திரனில் எழுதத் தொடங்கிய பத்மா, இலங்கை பத்திரிகைகளில் மாத்திரமன்றி தமிழக சஞ்சிகைகளிலும் எழுதியிருக்கிறார். கூட்டங்களில் உரையாற்றுவதிலும் இவர் தமது திறமையை வளர்த்துக் கொண்டார். இவருடைய பேச்சுக்களில் நல்ல தெளிவும் கருத்துகளும் சபையோரை நன்கு கவரக் கூடியதாக அமைந்திருக்கும்.

2004இல் பத்மாவும் கணவர் சோமகாந்தனும் இலக்கியத் தம்பதிகளாக "கனடா உதயன்" பத்திரிகையின் ஆண்டு விழாவிற்கு சிறப்புவிருந்தினராக இ ல ங ்  ை க ய ி ல ி ரு ந ் து அழைக்கப்பட்டிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே அவர்கள் தங்கியிருந்த சில மாதங்கள் ஓய்வொழிச்சலின்றி பல கூட்டங்களில் பத்மா உரையாற்றியிருக்கிறார். சில கருத்தரங்குகளில் வளவாளராகவும், பல கலை இலக்கிய நிகழ்ச்சிகளில் சிறப்பு விருந்தினராகவும், பிரதம விருந்தினராகவும் கலந்து கொண்டிருக்கிறார்.

கனடாவில் மட்டுமன்றி தமிழ்நாட்டிலும் பத்மாவுக்கு பரிசுகளும் பாராட்டுகளும் விருதுகளும் கிடைத்திருக்கின்றன.இவருடைய "கடவுளின் பூக்கள்" என்ற நூலுக்கு தமிழ்நாடு "லில்லி தேவசிகாமணி அறக்கட்டளையின்" பரிசு கிடைத்திருக்கிறது. "புதிய வார்ப்புகள்" சிறுகதைத் தொகுதி தென்ஆசிய நாடுகள் ஒத்துழைப்பு மகளிர் பிரிவின் பரிசைப் பெற்றது."வேள்வி மலர்கள்"என்ற சிறுகதைத் தொகுதி இந்தியாவின் முன்னணி நாளிதழான "இந்து"பத்திரிகையின் சிறந்த பாராட்டைப் பெற்றிருக்கிறது.

இவர் எழுதி 2002இல் வெளிவந்த "ஈழத்து மாண்புறு மகளிர்" என்ற நூல் சற்றே வித்தியாசமானது. ஈழத்திலே வாழ்ந்து கொண்டிருக்கும், - மகளிருக்கு முன்னோடிகளாகத் திகழும் மாண்புறு பெண்களின் சாதனைகள் குறித்து இந்தநூலை எழுதியிருந்தார் பத்மா.

உலகப் புகழ் பெற்ற சுவாமி சின்மயானந்தாவின் வாழ்க்கை வரலாற்றை முதன்முதலாகத் தமிழில் எழுதிய பெருமையும் பத்மாவுக்கே உண்டு.பாடசாலை ஆசிரியையாகத் தமது தொழிலை ஆரம்பித்து, முதலாம் தர அதிபராகப் பணிபுரிந்து, உதவிக் கல்விப்பணிப்பாளராகப் பதவி உயர்ந்து ஓய்வுபெற்ற பத்மா சிறுவர்களுக்காக பல ஆக்கங்களை அவ்வப்போது ஊடகங்கள் மூலம் வெளிக்கொணர்ந்திருக்கிறார்.

உலகெங்கும் பரவிவாழும் தமிழ்மக்களின் பிள்ளைகள், தமிழ்மொழியை வாசிக்கத் தெரியாமல் இருக்கிறார்கள். அவர்கள் தமிழ்ப் பண்பாட்டையும் சமய நெறிகளையுமாவது தெரிந்திருக்க வேண்டுமென்று கருதிய பத்மா அவர்களுக்காக சிறுவர்கள் வாசிக்கக் கூடிய நூலை ஆங்கில மொழியில் ஆக்கியிருக்கிறார். இந்த நூலை கொழும்பு இந்து மகளிர் சங்கம் வண்ணப் படங்களுடன் மிக அழகிய பதிப்பாக வெளியிட்டிருக்கிறது.

மகளிர் முன்னேற்றம் குறித்த இலக்கியங்கள் பத்மாவின் முக்கிய படைப்புகள் ஆகும். இதற்காக இவர் ஆற்றிய சேவைகள் மிகப் பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெண்ணின் குரல்" என்ற சஞ்சிகைக்கு இவரே ஆசிரியராக இருந்திருக்கிறார். ஊடகத்துறையில் கடமையாற்றும் பெண்களின் ஆளுமையை வலுப்படுத்தவும் அவர்களின் நலன்களைக் கவனிப்பதற்குமாக இயங்கிய "ஊடறு" என்ற அமைப்புக்குத் தலைமை தாங்கி வழிநடத்தியதும் பத்மாவின் பெருமைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

பத்மாவின் எழுத்துலகத்தின் தொடக்கம் சிறுகதைதான். பல சிறுகதைகளும் அதேசமயம் ஏராளமான கட்டுரைகளும் எழுதியிருக்கிறார். அவரது ஆக்கங்களை ஆய்வு செய்து யாழ், பேராதனை, தென்கிழக்கு, சப்பிரகமுவ ஆகிய நான்கு பல்கலைக்கழகங்களிலிருந்தும் மாணவர்கள் தமது பி.ஏ. பட்டங்களை நிறைவு செய்துள்ளார்கள்.

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளரும் ஊடகவியலாளருமான மாலன் "திசைகள்" என்ற பெயரில் ஒரு இணையத்தளத்தை நடத்தி வருகிறார். 2005 மார்ச் மாதம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அவர் மூன்று பெண் எழுத்தாளர்களை கௌரவித்தார். சிவகாசி கவிஞர் திலகபாமா, மதுரைக் கவிஞர் வைகைச்செல்வி இவர்களுடன் ஈழத்தைச் சேர்ந்த பத்மா சோமகாந்தனுக்கும் இடமளித்துக் கௌரவித்திருக்கிறார்.

ஈழத்தில் மட்டுமன்றி தமிழ்நாட்டிலும், புலம் பெயர்ந்தோர் நாடுகளிலும் தமது இலக்கிய காலடிகளைப் பதித்தவர் பத்மா. பிற்பட்ட காலத்தில் இவர் கொடகே நிறுவனத்துடன் இணைந்து சிங்கள, தமிழ் இன ஒற்றுமைக்கான இலக்கிய முயற்சிகளில் ஈடுபட்டு வந்தார். தமிழ் கூறும் உலகெங்கும் இலக்கியத் தடம்பதித்த பத்மா சோமகாந்தன் 2019ஆம் ஆண்டில் கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது!...

---

## ஒவ்வொன்றும்!...

-ஒவ்வொரு தோல்வியும் ஒரு அனுபவம்...
-ஒவ்வொரு இழப்பும் ஒரு இலாபம்...
-ஒவ்வொரு ஏமாற்றமும் ஒரு எச்சரிக்கை...
-ஒவ்வொரு காணாமல் போதலும் ஒரு தேடல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்...

## உதைபந்தாட்டம்

உலக உதைபந்தாட்ட வரலாற்றில் பல வீரர்கள் சரித்திரம் படைத்திருக்கிறார்கள். அந்த வகையில் 700 கோல்களுக்கு மேல் அடித்தவர்களின் விபரங்களைப் பார்ப்போம்... 30-06-2020 வரை...

Players with 700+ Career goals

| Player | Nationality | Goals | Years |
|---|---|---|---|
| 1. Josef Bican | - Czech+Austrian | - 805 | -1931- 1955 |
| 2. Romario | - Brazillian | - 772 | -1985- 2007 |
| 3. Pele | - " | - 767 | -1957- 1977 |
| 4. Ferenc Puskas | - Hungarian | - 746 | -1943- 1966 |
| 5. Gerd Muller | - Germany | - 735 | -1962-1981 |
| 6. Cristiano Ronaldo | - Portugse | - 726 | - 2002-Present |
| 7. Lionel Messi | - Argentine | - 700 | - 2005- " |

## 6 வது தடவையாக வெற்றிக்கிண்ணம் வென்ற ஜேர்மனி - Bayern Mönchen விளையாட்டுஅணி

சம்பியன்ஸ் லீக் கால்பந்து 6-ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்ற பேயர்ன் முனிச். ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் போட்டியில் பிரான்ஸ் பி.எஸ்.ஜி. அணியை 1-0என்ற கணக்கில் வீழ்த்தி பேயர்ன் முனிச் அணி 6-வது முறையாக சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றது.

கழக அணிகளுக்கான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டிகள் போர்ச்சுகலில் நடைபெற்றது. இந்த போட்டியின் பேயர்ன் முனிச் (ஜெர்மனி) மற்றும் பி.எஸ்.ஜி. பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பிரான்ஸ்) அரைஇறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று இறுதி போட்டிக்குள் நுழைந்தன.

இதையடுத்து போர்ச்சுகல் தலைநகர் லிஸ்பனில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியின் இறுதி போட்டி 23-08-2020ல் நடைபெற்றது. இதில் 5முறை சம்பியன் பட்டம் வென்ற பேயர்ன் முனிச் 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி பேயர்ன் முனிச் (ஜெர்மனி) அணி 6-வது முறையாக ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் பட்டத்தை வென்று கோப்பையை தட்டிச்சென்றது. இந்த வெற்றியை பேயர்ன் முனிச் வீரர்கள் உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப்பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- வவுனியா) - 480-00

02. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவுதிருகோணமலை -480-00

03. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு- மன்னார் -480-00

04. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா -480-00

05. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா -480-00

06. செல்வி அனிதா றஞ்சன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - மட்டக்களப்பு -480-00

07. திரு. Johannas Gruendler - ஜேர்மனி - 480-00
ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா

08. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- கிளிநொச்சி -200-00

09. செல்வன். சியாந்த் எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 200-00

10. செல்வன் பிரணவன் யோகராசா - ஜேர்மனி
ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு- வவுனியா - 240-00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 30-06-2020 + 39-78

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

07. திரு.ஜேம்ஸ் கிறிஸ்ரி அமலதாஸ் -London + 150-00
(தாயாரின் நினைவுநாள் அன்பளிப்பு நிதி உதவி)

08. திருமதி சுசிகலா கிருஸ்ணகுமார் -Duisburg + 100-00
(கணவனின் நினைவுநாள் அன்பளிப்பு நிதி உதவி)

09. திரு.ப.பாஸ்கரன் -London + 50-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

-------

+ 819-78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

\+ 819-78

அனுப்பியது:-

(1) "அருளகம்" சிறுவர் இல்லம் - வவுனியா -480-00

(2) "அன்பகம்" சிறுவர் இல்லம் - வவுனியா -400-00

(3) "மரியன்னை" சிறுவர் இல்லம்- தலைமன்னார்-100-00

-------

-980-00

Mann A/C

**வங்கிவரி** 01.07.2020-31.07.2020 - 10-53
01.08.2020-31.08.2020 - 11-12............ - 21-65

-------

\- 1001-65 - 1001-65

-----------

31-08-2020 மிகுதி இருப்பு (மேலதிகச் செலவு) - 181-87

---

# கொரோனா கோவிட்-19

உலகையே ஆட்டிப்படைத்து உயிர்ப்பலி எடுத்துவரும் இந்தக்கிருமி...

\- காற்றில் சுமார் 3 மணிநேரம் உயிர் வாழும்.

\- செம்பு, வெங்கல உலோகங்களில் 4 மணிநேரம் உயிர் வாழும்.

\- (காட்போட்) கடதாசி அட்டைகளில் 24 மணிநேரம் உயிர் வாழும்.

\- பிளாஸ்ரிக் பொருட்களில் 2 - 3 நாட்கள்வரை உயிர் வாழும்.

\- இரும்பு, உருக்குகளில் 2 - 3 நாட்கள்வரை உயிர் வாழும்.

பாதுகாப்பாக இருப்பது எங்கள் எல்லோரதும் பொறுப்பாகும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்**
**ඔළිරුම්වාළ්වු සංවිධානය - තුණුක්කායි**
**Olirumvaalvu Organization - Thunukkai**

**Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015**

ஒளிரும் வாழ்வு ஒருங்கிணைந்த இயற்கை விவசாயப்பண்ணை

மல்லாவி கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள வைத்தியதிகாரி வருகைதந்து எமது பண்ணையைப் பார்வையிட்டதுடன் ஆலோசனைகளையும் வழங்கினார். அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் அதுபோன்று தென்னை அபிவிருத்திச்சபையின் எமது பிரதேச உத்தியோகத்தரின் ஆலோசனைக்கு அமைவாக தென்னங்கன்றுகளை நாட்டியுள்ளதுடன் அவர்களின் ஏற்பாட்டில் அரைமானியத்திட்டத்தின் கீழ் தென்னங்கன்றுகளைப்பெற்று தந்திருந்தார் அவர்களுக்கு எமது நன்றிகள்..

தற்போது 200 தேக்கங்கன்றுகள் நாட்டியுள்ளோம் இதற்கும் வனவளத்திணைக்களம் குறைந்த விலையில் கன்றுகளை தந்திருந்தார்கள் இதற்காக உதவிய எமது பகுதி கிராம அலுவலர் துளசிதாஸ் அவர்களின் துணைவியாருக்கு எமது நன்றிகள்..

ஆடு வளர்ப்புத்திட்டம் மற்றும் அடிப்படை தேவைகளான மின்சாரம் நீர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் உதவி வருகின்ற பெயர்குறிப்பிட விரும்பாத புலம்பெயர்ந்த உறவுகளுக்கும் எம் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதில் மனநிறைவு அடைகிறோம்...

தற்போது மாற்றுத்திறனாளிகள் இருவருக்கு நிரந்தர வேலை வாய்ப்பை வழங்கி வருவதுடன் கிராமத்தில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பலர் தினம் எமது பண்ணையில் வேலைசெய்கிறார்கள்.

எதிர்காலத்தில் பலருக்கு வேலைவாய்ப்பை வழங்குவதே எமது நோக்கமாகும். அதனூடாக அவர்கள் தமது குடும்பத்தில் உள்ள பிள்ளைகளின் கல்வி மருத்துவம் போன்ற பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்யக்கூடியதாக அமையும். மேலும் பல தேவைகள் உண்டு ஆதலால் முடிந்தவரை உதவிபுரியுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்..

நன்றி.

செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

தலைவர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SEBAMALAI MARIYANNAI HOUSE OF COMPASSION

செபமாலை மரியன்னை இரக்கத்தின் இல்லம்

பேசாலை -மன்னார்

டொமினிக்கன் கன்னியர் மடம்
Dominican convent,
துள்ளுக்குடியிருப்பு
Thullukudiyiruppu
பேசாலை - மன்னார்
Pesalai.- Mannar
**023-2050095**

.29.../.07..../20.20....

அன்பின் - மண் சஞ்சிகை நல்ல உள்ளங்களுக்கு

நீங்கள் ஒவ்வொரு வருடமும் எமது பிள்ளைகளுக்கு செய்து வருகின்ற நிதி உதவிக்காக நாங்கள் எப்போதும் உங்களை அன்போடு நினைக்கின்றோம். இம்முறையும் எமது இல்லத்தின் சிறுமி கதிர்விழிக்கு அனுப்பிய பணம் 93.000-00 ரூபா கிடைக்கப்பெற்றோம் என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.அவருக்கு தேவையான பொருட்களை உரிய நேரத்தில் எடுத்துக்கொடுப்போம். பாடசாலைக்கல்வி சீரான நிலையற்று இருப்பதனால் எமது சிறுவர்கள் இல்லத்திலிருந்து கொண்டே கற்றல் முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள்.

நன்றி

இப்படிக்கு,

Sr. Mary Magdalin Joseph O.P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க தமிழ்

# தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம்
# Tamil Cultural Research Forum

No.10, Pattiowita Road, Ratnapura, Sri Lanka. | Tel/Fax: +94 452 224 255

2020.08.24

வ.சிவராசா
பிரதம ஆசிரியர் அவர்களுக்கும்,
"மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கும்
இதழின் வாசகர் பெருமக்களுக்கும் ,

<u>நன்றிநவிழ்தல்</u>

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகட்கு"

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய இம்மக்களுக்கு, நாட்டில் ஏட்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் உதவிக்கரம் நீட்டிய எமது ஐரோப்பா வாழ் எம் உறவுகளை ஒரு போதும் மறவோம். யேர்மனி "மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகை வழங்கிய கொடையளிப்பானது அனேக குடும்பங்களுக்கு பசியாற்றிஇருப்பதை குறித்து பெருமைக் கொள்கின்றோம்

ஐரோப்பா தாண்டி மலையகம் நோக்கிய உங்கள் நிவாரணப்பணியானது உண்மையில் பசியோடு வழிப்பார்த்திருந்த பலர் பசியற்றிருக்கின்றது என்பதில் எச்சந்தேகமுமில்லை.

நீங்கள் செய்திருக்கும் இக்கைங்கரியமானது காலத்தின் தேவைக்கேற்ற பெரும்புண்ணியமாகும். பெரும் ஆலயங்கள் எழுப்பிய கோடிப்பலன்கள் உங்களை வந்தடைய வாழ்த்துவதோடு எம்மக்கள் சார்பாக "மண்" கல்வி கலை இலக்கிய சமூக சஞ்சிகைக்கும் இதழின் வாசகர் பெருமக்களுக்கும் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றிகள்

இவண்,
க. சிவராஜ்வளவன்
தலைவர்
தமிழ் பண்பாட்டு ஆய்வு மன்றம்
இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா செய்திகள்....

1-கொரோன பாதிப்பால் உலகில் சுமார் 154 கோடி மாணவர்கள் கலவிநிலை பாதிப்பு.
2-கொரோனா விளைவாக உலகில் சுமார் 32 மில்லியன் பெண்கள் வீட்டு வன்முறைகளால் பாதிப்பு.
3-இற்றைவரை பல நாடுகள் ஊரடங்கு மற்றும் முடக்க நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.
4-கொரோனோவால் உலக மக்கள் சனத்தெகையில் 20 வீதமானோர் புகைத்தலைக் கைவிட்டுள்ளனர். புகையிலை உற்பத்திப் பொருட்களின் விற்பனை வீழ்ச்சி கண்டுள்ளது.
5-கொரோனாத் தொற்று உலகில் நீண்ட காலத்துக்கு நீடிக்கலாம் என உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
6-அமெரிக்காவிற்கு அடுத்த படியாக லத்தீன் அமெரிக்க நாடுகளான பிறேசில் மெக்ஸிக்கோ, பேரு, சிலே, கொலம்பியா போன்ற நாடுகளில் உயிரிழப்புக்கள் அதிகரித்துள்ளன.
7-கொரோவின் பாதிப்பால் உலகம் முழுவதும் இணையவழிக் கல்விமுறை பலமடங்கு அதிகரித்துள்ளது.
8-கொரோனா தாக்கத்தின் விளைவாக ஆலயங்கள் கோவில்கள் மசூதிகளில் வழிபடுவோர் தொகை குறைவடைந்ததுடன் இவைமூலம் பொதுமக்களுக்குப் பலவழிகளிலும் நிவாரண உதவிசெய்யும் முறைகள் அதிகரித்துவிட்டன.
9-பணிபுரியும் இடம், பொது இடம், வீதிகள் போன்ற மக்கள் கூடும் இடங்கள் எல்லாம் எச்சில் துப்புதல், அசிங்கப்படுத்துதல் போன்றவற்றிற்குத் தண்டப்பணம் அறவிடுவதால் இந்த இடங்கள் எல்லாம் என்றுமில்லாதவாறு சுத்தம் பேணப்படுவதுடன் தனிநபர் பழக்கவழக்கங்களிலும் சுத்தம் சுகாதாரம் பேணும் பழக்கம் அதிகரித்துவிட்டது.
10-கொரோனா தொற்று நீடிப்பதால் உலகில் சமார் 10 மில்லியன் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லமுடியாத நிலை தோன்றியுள்ளது.
11-உலகநாடுகளில் பரவிவரும் கொரோனா கிருமித்தாக்கத்தால் 15 வினாடிக்கு ஒருவர் இறந்துவிடுகிறார்கள் என உலக சுகாதார அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.
12-கொரோனா கிருமிகள் உடை, காற்று தண்ணீர், இரும்பு, செம்பு,வெங்கலம்,பிளாஸ்ரிக், கடுதாசிஅட்டை, இரும்பு, உருக்குகள் ஊடாகவும் பரவக்கூடியது என உலகசுகாதரா அமைப்பு அறிவித்துள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைச் செய்திகள் சில...

-கடந்த 5 வருடங்களில் பல்வேறு குற்றச்சாட்டுக்களில் 61 பேருக்கு மரண தண்டனை வதிக்கப்பட்டதுடன் 160 பேருக்கு ஆயுள்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.
-இலங்கையின் பிரதான விலங்கியல் சாலையான கொழும்பு- தெஹிவளைச் சாலை தனது 84 ஆண்டு நிறைவைக் கொண்டாடியுள்ளது.
-இலங்கையில் எயிட்ஸ் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தற்போது 265 பேர் எனவும் இவர்களில் 60 பேர் பெண்கள் எனவும் சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.
-வடபகுதியில் 2020 தை - ஆடி வரையுள்ள 7 மாதங்களில் 2.327 கிலோ கஞ்சாப் போதைப் பொருட்களை இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர். வடபகுதில் என்றுமில்லாவாறு போதைப் பாவனை அதிகரிப்பு.
-இலங்கையில் கடந்த 2 மாதங்களில் போதைப்பொருள் விபத்து, கொலை, கொள்ளை, அரசியல் எனப் பல்வேறு குற்றச்சாட்டுக்களில் 1.25.742 பேர் கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.
-திருகோணமலைக் கடற்பரப்பில் கடலுக்கடியிலான அருங்காட்சியகம் ஒன்று திறந்து வைக்கபபட்டுள்ளது. 60 அடி ஆழம், 150 அடி நீளம் 85 அடி அகலம் கொண்ட இது சுற்றுலாத்துறையைக் கவருவதுடன் வருவாயையும் ஈட்டிக்கொடுக்கும்.
-இலங்கையின் மிகவும் பழமைவாய்ந்த "வீரகேசரி" நாளிதழ் தனது 90வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியுள்ளது.
-இலங்கையின் பழமைவாய்ந்த அரசியல் கட்சியான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி தனது 77 வருடநிறைவைக் கொண்டாடியது
-கடந்த 5-8-20 அன்று இலங்கையில் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தல் மிகக்குறைந்த அசம்பாவிதங்களுடன் அமைதியாக நடைபெற்றதாக ஊடகங்கள் தெரிவித்தன. பல வெளிநாடுகளும் பாராட்டுத் தெரிவித்துள்ளன.
-இலங்கையில் கடந்த 5 மாதங்களில் கடும் வறட்சி ஏற்பட்டபடியால் 69.571 குடும்பங்களைச் சேர்ந்த 2.32.423 பேர் கடும் பாதிப்பு.
-கடந்த 10 வருடங்களாகக் காணாமல்போனோர்களைத் தேடி அலைந்த மக்களில் 72 பெற்றோர்கள் இறந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.
-அடுத்த தேர்தலாக மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒரே நாளில் நடாத்திமுடிக்க அரசு முடிவு செய்துள்ளது. 2021 தை - மாசி மாங்களில் நடைபெறலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகச்செய்திகள் சில...

-இயற்கை அழிவுகளும் இறப்புக்களும்.. 20.07.2020சீனாவில்கடும் மழை வெள்ளம் 200 பேர்வரை பலி. ஒருமாதகால தொடர்மழையால் 3.78 கோடிமக்கள் பாதிப்பு. 2.24 இலட்சம் மக்கள் இடம்பெயர்வு.
-ஐக்கிய அரபு இராச்சிய நாடு செவ்வாய் கிரகத்துக்கு முதலாவது விண்கலத்தை ஏவியது. இது 7 மாதங்கள் பயணித்து 500 மில்லியன் கி. மீ தூரத்தைப் பயணிக்கும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
-அரபு உலகின் முதல் அணு உலை ஐக்கிய அரபு இராச்சியத்தில் (U.A.E) திறந்து வைக்கப்பட்டுள்ளது.
-இவ்வருடம் நோபல்பரிசு வழங்கும் விழா ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக நோபல் கமிட்டி அறிவித்துள்ளது. ஆனால் பரிசுக்குரியவர்கள் விபரம் அறிவிக்கப்படும்.
-சுமார் 75 வருடங்கள் வரலாற்றில் ஐக்கியநாடுகள் சபையின் உலகத்தலைவர்களின் கூட்டம் நேரடியாகப் பங்குகொள்ளாமல் உச்சிமகாநாடு இணையவழியில் எதிர்வரும் 15செப்டெம்பரில் நடைபெறும். சுமார் 193 நாடுகளின் தலைவர்கள் இதில் கலந்துகொள்ளுவார்கள்.
-இந்தியா தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு காரணங்களால் சுமார் 1.000 யானைகள் இறந்துள்ளன. இந்தியா முழுவதும் சுமார் 27.000 யானைகள் உள்ளன என்றும் இதில் 10 வீதம் தமிழ்நாட்டில் உண்டு எனவும் விலங்கியல் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.
-லெபனானில் அமோனியம் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் சுமார் 1.500 பேர்வரை பலியாகியுள்ளனர். 5.000 பேர்வரை காயம், 3 லட்சம்பேர் வீடிழப்பு, 80.000 சிறுவர்கள் பாதிப்பு.
-இந்தியா-அயோத்தியில் இராமர் கோவில் கட்டும் பணிகளைப் பிரதமர் மோடி அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.
-உலகின் முதலாவது அணுக்குண்டுத் தாக்குதலை (06-08-1945) அமெரிக்காநாடு யப்பான்நாடுமீது மேற்கொண்ட 75 வது ஆண்டு நினைவு நாள் யப்பான் உள்ளிட்ட பல நாடுகளில் நினைவு கொள்ளப்பட்டது. இதில் சுமார் 1.40 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டனர்.
-ஈராக்கில் பெண் அரசியல் வாதிகள், செயற்பாட்டாளர்கள் என அடுத்தடுத்து 3 பெண்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.
-உலகின் மிகப்பெரும் வல்லரசான அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி தேர்தலின் ஜனாதிபதி வேட்பாளராக ஜோ பைடனும் உதவி ஜனாதிபதி வேட்பாளராக இந்திய தமிழ் வம்சாவழியைச் சேர்ந்த கமலா ஹரிஸ் என்ற பெண்மணியும் தேர்தல் களம்மிறங்கத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் செம்பியன் செல்வன் ஆ. இராஜகோபால்

## ஞாபகார்த்தச் சிறுகதைப்போட்டி (2020) முடிவுகள்

## (இலங்கை)

முதற்பரிசு - ரூபா ஐயாயிரமும் சான்றிதழும்

1. ஒரு போத்தல் தண்ணீர்

எஸ். ஐ. நாகூர்கனி, 42,பேரா வீதி, வாழைத்தோட்டம், கொழும்பு-12

இரண்டாம் பரிசு ரூபா மூவாயிரமும் சான்றிதழும்

2. காவியத் தலைவன் ஈழநல்லூர் கண்ணதாசன் 203, புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

மூன்றாம் பரிசு ரூபா இரண்டாயிரமும் சான்றிதழும்

3. நுண்ணுயிர்க் கொல்லி

எஸ்.சிவகலை (Dr. S. Ratha), 49B, 33ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு-06

பின்வரும் கதைகள் பரிசுச் சான்றிதழ்கள் பெறுகின்றன :

4. தூறல்கள் மழையாகலாம்
   விமல் பரம், லண்டன்
5. நெருப்புப் பெட்டி
   முஸ்டீன், 189- 3/4, Mahavidyalaya Mawatte, Colombo -13
6. அம்மாவின் எண்பதாவது பிறந்ததின உரை
   கே.எஸ்.சுதாகர், அவுஸ்திரேலியா
7. அவளா இவள்
   தேவகி கருணாகரன், அவுஸ்திரேலியா
8. வெறுமை
   கீர்த்தனி வாகீசன், அவுஸ்திரேலியா
9. ஐந்தும் பெற்றால்
   வயிரமுத்து சிவராசா, ஜேர்மனி.
10. சதிமுயற்சி என்னும் கற்பனை
    எஸ்.பி.கிருசஷ்ணன் 244/4 கண்டி றோட், அரியாலை, யாழ்ப்பாணம்

(நடுவர்கள்: "சாகித்திய ரத்னா" தெளிவத்தை ஜோசப், புலோலியூர் ஆ. இரத்தின வேலோன், டாக்டர் ச. முருகானந்தன், திருமதி வசந்தி தயாபரன், ஞானம் பாலச்சந்திரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















உலகமெல்லாம் கொரோனா நுண்ணுயிர்
பேரழிவு 2019 - 2020



- மண் சஞ்சிகையின் அஞ்சலிகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

**MANN**
**Germany / Ausgabe 203**



பிறப்பு: 05.03.1931 / இறப்பு: 15.07.2020

வண்ணார்பண்ணை (பிறந்த இடம்)
நாரகென்பிட்டி (இறுதியாக வாழ்ந்த இடம்)
அமரர் திருமதி பத்மாவதிஅம்மாள்
சோமகாந்தன் (பத்மா)
மூத்த எழுத்தாளர் - இலக்கியவாதி



பிறப்பு: 09.07.1940 / இறப்பு: 09.08.2020

ஓமந்தை (பிறந்த இடம்)
அல்வாய் தெற்கு Ilford United Kingdom
அமரர் தம்பிமுத்து மார்க்கண்டு பி.ஏ (சிறப்பு)
தமிழார்வலர் - இலக்கியவாதி

முன்னாள் அரசாங்க அதிபர் வவுனியா
மாவட்டம் / வடக்கு-கிழக்கு மாகாண காணி,
விவசாய, கால்நடைஅபிவிருத்தி, நீர்ப்பாசன
அமைச்சின் முன்னாள் செயலாளர்



| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org